வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 19.05.2022 வியாழக்கிழமை | இதழ் : 164 | பக்கங்கள் : 16

# இந்த உலகில் யார் எதிர்த்தாலும் தமிழர் நாம் நிமிர்ந்தெழுவோம்!

## முள்ளிவாய்க்காலில் நேற்று பிரகடனம்

முல்லைத்தீவு, மே. 19

மே 18 ”தமிழர்கள் நாம் வீழ்ந்துவிடவில்லை வீழ்ந்தாலும் மறுபடியும் எழுவோம்” என்று வீழ்ந்துபட்ட எம் உறவுகளுக்கு வாக்குறுதி அளிக்கும் ஒரு நாளுமாகும். இந்த உலகில் யார் பாராதிருந்தாலும் யார் எதிர்த்தாலும் நாங்கள் நிமிர்ந்தெழுவோம், போராடுவோம், விழுதெறிவோம்.

- இவ்வாறு “முள்ளிவாய்க்கால் பொதுக்கட்டமைப்பு“ இன்று முள்ளிவாய்க்கால் மண்ணில் வைத்து வெளியிட்டுள்ள முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

”ஈழத் தமிழர்களின் வரலாற்றில் துயர் மிகு நாட்களில் ஒன்றாகிய முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவு நாளான மே 18 இல் மீண்டும் ஒரு தடவை நாம் கூடியுள்ளோம். இந்த 15



# மக்களின் கண்ணீர் வெள்ளத்தில் நனைந்தது முள்ளிவாய்க்கால்!

## ஆயிரக்கணக்கானோர் நேற்று நினைவிடத்தில் கூடி அஞ்சலி



முல்லைத்தீவு, மே. 19

இறுதிப்போரில் கொல்லப்பட்டவர்களை நினைந்துருகி கண்ணீர் சிந்தி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் நேற்று ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர். 15

## வெளிப்பட்டார் மஹிந்த ராஜபக்ஷ சபை அமர்விலும் நேற்று பங்கேற்பு!



கொழும்பு, மே. 19

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் நேற்று பாராளுமன்றம் வருகை தந்தனர்.

மே 09 தாக்குதல் சம்பவத்தின் பின் னர், 10 ஆம் திகதி காலை மஹிந்த ராஜபக்ஷ, பலத்த பாதுகாப் புக்கு மத்தியில் அலரிமாளிகையில் இருந்து வெளியேறினார். 15

## சகவாழ்வெனும் விளக்கால் நாட்டை ஒளியேற்றுவோம்!

### சந்திரிகா அம்மையார் அழைப்பு



கொழும்பு, மே 19

இருளாக இருந்த எங்கள் நாட்டை சகவாழ்வெனும் விளக்கால் ஒளியேற்றுவோம் - என்று முள்ளிவாய்க்கால் நினைவு தினமான நேற்று தீபமேற்றி அஞ்சலித்து அழைப்பு விடுத்திருக்கிறார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கள பண்டார நாயக்கா.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட பதி 15

## பல்கலை மாணவர்கள் - சி.ஐ.டியினர் பரந்தன் சந்தியில் நேற்று முறுகல்!

கிளிநொச்சி, மே. 19

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இராணுவப் புலனாய்வாளருக்குமிடையே பரந்தன் சந்தியில் நேற்று முறுகல் நிலை ஏற்பட்டது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலுக்கு செல்வது வழக்கம்.

இந்த நிலையில் நேற்றுக் காலை யாழ். பல்கலைக் கழகத்தில் இருந்து 50மேற்பட்ட மாணவர்கள் முள்ளிவாய்க்கால் நோக்கி பஸ் ஒன்றில் சென்றிருந்தனர்.

யாழ் பல்கலைக் கழக மாண 15

பேரறிவாளன் விடுதலை! 04

## தமிழர்களுக்கு எதிரான வன்முறை இன்று உங்கள் மீதே தொடர்கிறது

### சபையில் மனோ கணேசன் ஆவேசம்

கொழும்பு, மே. 19

“இந்த பிக்குகளுக்கு அரசியல் வேண்டாம். கைகூப்பி கோருகிறேன். இவர்கள்தான் இத்தனைக்கும் காரணம். இவர்களை விகாரைக்கு அனுப்புங்கள். அரசியலில் இவர்கள் வேண்டாம். எங் 15



# ஜனாதிபதிக்கு எதிராக நான் வாக்களிப்பேன்!

## பிரதமர் ரணில் அதிரடி

கொழும்பு, மே. 19

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு வரும்போது அதற்கு ஆதரவாகத் தாம் வாக்களிக்கவுள்ளார் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நேற்று முன்தினமே விவாதத்துக்கு எடுப்பது என்பதை முடிவு செய்வதற்கான வாக்கெடுப்பு நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டதை அடுத்து பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இது ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு அல்ல. இது அனைத்து பாராளுமன்ற நடவடிக்கைகளையும் இடை 15





# யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மே. 19

யாழ். பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

மே 18 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் வருடாந்தம் அனுஷ்டிக்கப்படும் நிலையில் யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

ஓர் 'அறுவை'த் திரைப்படத்தை ஒருவர் தொடர்ந்து பத்து நாளாகப் பார்த்துக்கொண்டிருந்தார்.

வியப்பு அடைந்த திரையரங்க மேலாளர், "உங்களுக்கு இந்தப் படம் ரொம்பப் பிடிச்சிருக்கா? நாள் தோறும் வருகின்றீர்களே?" என்று கேட்டார்.

"அதெல்லாம் ஒன்றும் இல்லை. இந்தப் படம் சரியான 'போர்'தான்.

இதில் ஒரு காட்சியில் கதாநாயகி குளிக்கறதுக்காக ஒவ்வோர் ஆடையாகக் கழற்றிப் போடுகிறார். அப்ப திடீர்னு அந்த வழியா ஒரு ரயில் வந்துவிடுகின்றது.

அது போனவுடன் பார்த்தால், அவள் குளத்தில் குளித்துக்கொண்டிருக்கிறாள். ஒரு நாளாவது அந்த ரயில் தாமதமாக வராதா என்பதற்காகத்தான் நாள்தோறும் வருகிறேன்'' என்று விளக்கம் தந்தார் அவர்.

இது, உங்களை கொஞ்சம் சிரிக்க வைப்பதற்காகவே இங்கு தரப்பட்டது.

சில நாட்களுக்கு முன்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை குறித்து விவாதித்தபோது அதனை ஆதரிப்பதில்லை என்றும், நூற்றி பதின்மூன்று பேர் அந்த பிரேரணைக்கு ஆதரவாக இருந்தால் மாத்திரமே தாங்களும் ஆதரவாக வாக்களிப்பது என்றும், தமது வாக்குகளால் அந்தப் பிரேரணை வெற்றிபெற சந்தர்ப்பம் வழங்குவதில்லை என்றும் முடிவெடுத்திருந்தது.

அந்தப் பிரேரணை, மஹிந்தர் பிரதமராக இருந்தபோது, அவரது அரசுக்கு எதிராக கொண்டுவரப்படவிருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை.

அப்போது, பொதுஜன முன்னணியிலிருந்து வெளியேறி சுயாதீனமாக இயங்கிக்கொண்டிருந்த பதினொரு கட்சிகளும், பிரதமர் பதவிவிலகவேண்டும் என்றே குரல்கொடுத்துக்கொண்டிருந்தன. இது, ஜனாதிபதிக்கு எதிராக அல்ல என்பதை கவனத்தில் கொள்க.

பிரதமருக்கு எதிரான அந்த பிரேரணைக்கு அவர்கள் நிச்சயம் ஆதரவு வழங்குவார்கள் என்ற நிலை.

அதாவது, பிரதமர் மஹிந்த பதவி விலகாமல் இருந்திருந்தால், அந்தப் பிரேரணை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு வந்திருக்கும். அவ்வாறு வந்திருந்தால் அது வெற்றியடைந்திருக்கும்.

ஆனால், ஜனாதிபதிக்கு எதிரான பிரேணை வெற்றி பெற்றிருந்தாலும், அது ஜனாதிபதியை பதவியிலிருந்து வெளியேற்றியிருக்காது. பாராளுமன்றம் ஜனாதிபதி மீதான நம்பிக்கையை இழந்தவிட்டது என்பதை மாத்திரமே அதன் மூலம் சொல்லியிருக்கும்.

அது எதற்காக கொண்டுவரப்பட்டது என்பது பற்றி எற்கனவே இந்தப் பத்தியில் கேள்வி எழுப்பியிருந்தேன்.

ஆனால், இந்தப் பிரேரணையை ஆதரிப்பது என்று தமிழ் தேசிய கூட்டமைப்பு முடிவு செய்திருந்தது. மஹிந்தவுக்கு எதிரான பிரேரணையில் தயக்கம் காட்டிய கூட்டமைப்பு, ஜனாதிபதி மீதான பிரேணைக்கு ஏன் ஆதரவு வழங்கியது என்பது தெரியவில்லை.

ரணில் பிரதமரான பின்னர், ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்பதில் கூட்டமைப்பு அதிக கரிசனை காட்டுவதை காணமுடிகின்றது. ரணில்மீதான தமது பயபக்தியை சம்பந்தனும் சுமந்திரனும் வெளிப்படுத்திய பின்னர் ஜனாதிபதிக்கு எதிராக மல்லுக்கட்டுவது, ரணிலை ஜனாதிபதியாக்கவா என்று எழும் கேள்வியை தவிர்க்க முடியவில்லை.

ஏனெனில், இன்று ஜனாதிபதி பதவி விலகினால் பிரதமரே அந்தப் பதவியில் அமரமுடியும். அப்படி அமர முடிந்தால் மாத்திரமே ரணிலால் அந்தப் பதவியில் ஒரு நாளாவது அமர்ந்த பெருமையை பெறமுடியும்.

ரணில் பிரதமரான பின்னர், இந்தியத் தூதுவர் கூட்டமைப்பு தலைவரைச் சந்தித்திருந்தார். அப்போது அவர், ரணிலை பிரதமர் பதவிக்கு கொண்டுவந்ததில் இந்தியாவுக்கு எந்பதப் பங்கும் இல்லை என்று தெரிவித்திருந்ததாக சம்பந்தன் பின்னர் ஊடகங்களுகக்கு தெரிவித்திருந்தார்.

ஓர் இராஜதந்திரி, தன்னுடனான நட்புக் காரணமாக தெரிவிக்கின்ற விடயங்களில், எதனை பொதுவெளியில் தெரிவிக்கலாம் என்பதைக்கூட தெரிந்து வைத்திருக்காதவர்களை தலைவர்களாக கொண்ட இனம் நாம் என்று நொந்துகொள்வதைத் தவிர வேறு வழியில்லை!

அந்த திரைப்பட ரசிகன் இப்போது உங்கள் நினைவில் வந்துபோனால் அதுவும் நமது தலைவிதிதான்!

**- ஊர்க்குருவி**

# பொலிஸ்துறையில் உரிய தகுதியற்ற 126 பேர் பொறுப்பதிகாரி பதவியில்!

### சிங்கள ஊடகம் பரபரப்பு தகவல்

கொழும்பு, மே. 19

பொலிஸ்துறையில் 126 பேர் பொறுப்பதிகாரிகளாக நேர்காணலுக்கு கூட செல்லாமல் நியமனம் பெற்றுள்ளனர் என்று சிங்கள ஊடகம் பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று புதன்கிழமை அந்த இணையத் தளத்தில் வெளியான செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன்றைய அரசாங்கத்தின் கீழ் 01.01.2021 முதல் 03.11.2021 வரை பதவிகள் வழங்கப்பட்ட 184 பொலிஸ் பொறுப்பதிகாரிகளில் 126 பொறுப்பதிகாரிகள் அதற்கான நேர்காணலுக்குக் கூட செல்லாமல் பதவிகளைப் பெற்றுள்ளனர்.

நேர்காணலில் தோல்வியடைந்த மூன்று பொலிஸ் பணியாளர்கள் அரசியல் அழுத்தத்தினால் பொறுப்பதிகாரி பதவிகளைப் பெற்றுள்ளனர்.

முன்னதாக, 13 அதிகாரிகள் எந்த பொலிஸ் நிலையத்திலும் பொறுப்பதிகாரியாக இல்லாமல் ஏ-1 அல்லது ஏ-2 பொலிஸ் நிலையங்களில் பொறுப்பதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர்.

மேலும், இதற்கு முன்னர் எந்தவொரு பொலிஸ் நிலையத்திலும் பொறுப்பதிகாரி பதவிகளை வகிக்காத 21 அதிகாரிகள் ஏ-3 நிர்வாக தர பொலிஸ் நிலையங்களில் பொறுப்பதிகாரி நியமனங்களைப் பெற்றுள்ளனர்.

பி அல்லது சி தர பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரி பதவியில் இருந்து தரம் ஏ-3, ஏ-2 அல்லது ஏ-1 இல் நேரடியாக பொறுப்பதிகாரி பதவிக்கு பதவி உயர்வு பெற்ற 19 பொறுப்பதிகாரிகள் உள்ளனர்.

இந்த நியமனங்களைத் தொடர்ந்து, பொலிஸ் அதிகாரிகளின் கடமைகளில் ஏற்பட்ட இடையூறுகள் மற்றும் பொலிஸ் துறையினரின் கெடுபிடிகள் கணிசமான அளவு அதிகரிப்பது குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு பொலிஸ் மா அதிபர் அறிவித்துள்ளார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மண்ணெண்ணெய் வழங்குமாறு கோரி வெள்ளவத்தை வீதியை மூடிய மக்கள்!

கொழும்பு, மே. 19

மண்ணெண்ணெய் வழங்குமாறு கோரி வெள்ளவத்தை பகுதி மக்கள் வெள்ளவத்தை இராமகிருஷ்ணா வீதிக்கு அருகில் உள்ள காலி வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் காலி வீதியின் போக்குவரத்து முற்றாக செயல் இழந்ததாக தெரிவிக்கப்பட்டது. (அ)



# எம்.பிக்கள் தமது வாகனத்தில் இருந்தால் மட்டும் எரிபொருள்!

### சபாநாயகர் அதிரடி உத்தரவு

கொழும்பு, மே. 19

பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களின் வாகனங்களில் இருந்தால் மட்டுமே அவர்களுக்கான எரிபொருளை விநியோகிக்குமாறு பொலிஸாருக்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன அதிரடி உத்தரவைப் பிறப்பித்துள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக நாரஹேன்பிட்டி பொலிஸ் போக்குவரத்து பிரிவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தின் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எரிபொருளை வழங்குமாறு பொலிஸ்மா அதிபரிடம் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன கோரிக்கை விடுத்துள்ளார்.

எரிபொருளை பண அடிப்படையில் வழங்குமாறு சபாநாயகர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்படி, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் எரிபொருளின் தொகையை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவுக்கு வழங்கி, அந்த இடத்துக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரி ஒருவர் நியமிக்கப்படுவார் என்று மின்வலு எரிசக்தி அமைச்சர் தெரிவித்தார்.

எரிபொருள் நிரப்பும்போது பாராளுமன்ற உறுப்பினர் வாகனத்தில் இருத்தல் வேண்டும். அவர்களின் கைகளில் பணம் இருந்தால் மட்டுமே எரிபொருள் நிரப்பப்படும் என்று கொழும்பு செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (அ)

# தொடர்கிறது சீரற்ற வானிலை; 5 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, மே 19

ஐந்து மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு எச்சரிக்கையை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் நீடித்துள்ளது.

அதற்கமைய, களுத்துறை, கண்டி, கேகாலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை, இன்று மாலை 4 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்று தென்மேற்கு பருவப் பெயர்ச்சி மழை இலங்கையில் நிலைகொள்ளும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# வெற்றுக்கானுக்கு டீசல் வழங்க மறுத்ததனால் லொறி எரிபொருள் தாங்கியுடன் வந்தார் சாரதி!

கொழும்பு, மே 19

வெற்றுக்கானுக்குள் டீசல் வழங்க மறுத்தமையால் லொறியின் எரிபொருள் தாங்கியைக் கழற்றி வந்து டீசலை பெற்றுச் சென்றார் சாரதி ஒருவர்.

பண்டாரகமவில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் இந்த சம்பவம் இடம்பெறறது.

வெற்றுக்கானுடன் வருவோருக்கு டீசல் வழங்க எரிபொருள் நிலையப் பணியாளர்கள் மறுத்த காரணத்தால் அவர் தனது லொறியில் உள்ள எரிபொருள் தாங்கியை கழற்றி மோட்டார் சைக்கிளில் கட்டி வந்து எரிபொருளை பெற்றுச் சென்றார். (அ)



ஈழநாடு
Eelanadu
19.05.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 05

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# இன்னும் அரசியல் கற்கவில்லையா?

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோரி, தொடர்ந்தும் போராட்டக்காரர்கள் இயங்கிவரும் நிலையில், ஜனாதிபதியின் மீதான, அதிருப்தியை வெளிப்படுத்தும் பிரேரணை வாக்கெடுப்பில் தோல்வியடைந்திருக்கின்றது. 119 வாக்குகள், ஜனாதிபதிக்கு ஆதரவாகவும், ஜனாதிபதிக்கு எதிராக 68 வாக்குகளும் விழுந்திருக்கின்றன.

இதன் மூலம், ஜனாதிபதியின் மீது நம்பிக்கையிருக்கின்றது என்னும் நிலைமையை பாராளுமன்றம் உறுதிப்படுத்தியிருக்கின்றது. இதுவரை அவருக்கு ஆதரவு இருக்கின்றதா அல்லது இல்லையா – என்னும் விடயம், ஒரு புதிராகவே இருந்தது. அதற்கான உறுதியான பதில் இதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஒருவேளை, இந்த யோசனை வாக்கெடுப்புக்கு விடப்படாதிருந்திருந்தால், ஜனாதிபதிக்கான ஆதரவு மக்கள் மத்தியில் குழப்ப நிலையிலேயே இருந்திருக்கும்.

இது தொடர்பில் ஈழநாடு ஏற்கனவே எச்சரித்திருந்தது. ஆனால், கூட்டமைப்பினர் எமது எச்சரிக்கையை கண்டுகொள்ளவில்லை. தங்களுக்கு அனைத்தும் தெரியுமென்னும் இறுமாப்பில் செயற்பட்டனர். இப்போது தோல்வியடைந்திருக்கின்றனர்.

இந்த யோசனையை சுமந்திரனே முன்வைத்திருக்கின்றார். சுமந்திரனுக்கு ஒன்று புரியவேண்டும். அதாவது, ஒரு தமிழர் ஜனாதிபதி கோட்ட்டாபயவுக்கு எதிரான ஆலோசனையை முன்வைத்தால் – அது நிச்சயம் தோல்வியடையும். அவ்வாறு முன்வைக்கும் யோசனை என்னதான் கவர்ச்சிகரமானதாக, பொருத்தமானதாக இருந்தாலும்கூட, அதனைச் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரும்பான்மையாக ஆதரிக்கமாட்டர்கள். மேலும், தற்போதுள்ள சூழலில் ஜனாதிபதிக்கு எதிராக ஆளும் தரப்பிலுள்ள அநேகர் வாக்களிக்க விரும்பமாட்டார்கள். இது தொடர்பிலும் ஈழநாடு ஏற்கனவே தெளிவாக எச்சரித்திருந்தது. அத்துடன், சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் குழுவும், கூட்டமைப்பின் யோசனைக்கு ஆதரவளிப்பதற்கான வாயப்பில்லை என்பதையும் நாம் சுட்டிக் காட்டியிருந்தோம்.

ஜனாதிபதிக்கு எதிரான அதிருப்தி யோசனை தோற்கடிக்கப்பட்டதிலிருந்து, ஜனாதிபதியை வீட்டுக்குச் செல்லுமாறு கூறும் கோசங்களும் அதற்கான வலுவை இழந்து போயிருக்கின்றன. அவ்வாறாயின் ஜனாதிபதிக்கு ஆதரவாக வாக்களித்தவர்களும் வீடு செல்லவேண்டுமென்னும் கோசத்தை போராட்டக்காரர்கள், முன்வைக்க வேண்டும். ஆனால் மஹிந்த ராஜபக்ஷவின் வெளியேற்றத்தை தொடர்ந்து, போராட்டக்காரர்களின் செயற்பாடுகள் சற்று வீரியம் குன்றிவருவது போலும் தெரிகின்றது. இவ்வாறானதொரு சூழலில்தான், ஜனாதிபதியின் மீதான நம்பிக்கை, பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதாவது, ஜனநாயக ரீதியான முறையில்.

தமிழ் அரசியல்வாதிகள் என்போர் – ஒன்றில் அரசியல் தொடர்பில் போதிய கற்றல் இல்லாமல் இருக்கின்றனரா அல்லது எதையும் கற்றுக் கொள்ளவேமாட்டோம் – என்னும் வீறாப்பில் இருக்கின்றனரா? சிறிலங்காவின் பாராளுமன்றம் தொடர்பில், போதிய அனுபவங்களும் படிப்பினைகளும் இருந்தபோதிலும் கூட, இவ்வாறு பொறுப்பற்றுச் செயற்படுவதானது, சரியான ஒன்றல்ல. இதன் மூலம் இப்போது சுமந்திரன் சாதித்தது என்ன?

எதுவுமேயில்லை. மாறாக, இதன் மூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நன்மையடைந்திருக்கின்றார். அவரது பதவி விலகல் தொடர்பில் வாதிடுவோருக்கு – அவர் இதனை ஒரு பதிலாக முன்வைக்க முடியும். 69 லட்சம் மக்கள் எனக்கு வாக்களித்திருக்கின்றனர். பாராளுமன்றம் என் மீது நம்பிக்கை வைத்திருக்கின்றது. இந்த நிலையில் ஒரு சிறிய குழுவினர் கூறுவதற்காக, நான் எவ்வாறு பதவி விலக முடியும்? இப்படிக் கேட்டால் – அது நியாயமான கேள்விதான். ஜனாதிபதியின் கைகள் முன்னரைவிடவும் பலமடைந்திருக்கின்றன.

# ‘காடைத்தனமான’ மக்கள் பிரதிநிதிகள்!

- அலசுவது இராஜதந்திரி -

இலங்கையின் சட்டமா அதிபர் சஞ்சே ராஜரட்ணம், மே மாதம் 9ஆம் திகதி காலி முகத்திடல் மற்றும் அலரி மாளிகை முன்பாக இடம்பெற்ற வன்முறைகள் தொடர் பாக 22 பேரை கைதுசெய்யுமாறு குற்றப் புல னாய்வுத்துறை பொலிஸாருக்கு உத்தரவிட் டுள்ளார்.



சட்டமா அதிபர் கைதுசெய்யுமாறு உத்தரவிட்ட நபர்களில் பாராளுமன்ற உறுப்பினர் கள், மற்றும் அமைச்சர்கள் ஆகியோரும் அடங்குகின்றனர்.

அத்துடன், கொழும்பு மாவட்டத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனும் சட்ட மா அதிபரினால் கைதுசெய்யப்பட வேண்டி யவர்கள் என்று குறிப்பிடப்பட்டவர்களில் அடங்குகின்றார். இவர் ஏற்கனவே காலிமுகத் திடலில் அரசுக்கு எதிராக அமைக்கப்பட் டுள்ள ‘கோட்டா கோ கம’ கற்பனைக் கிராம த்தில் இருப்போரால் நையப்புடைக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டியவர்கள் என்று குறிப்பிடப்பட்டவர்களில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ முதன்மையானவராக இருக்கின்றார். சட்ட மா அதிபரின் உத்தரவையடுத்து ஏற்கனவே சிறிலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த சனத் நிஷாந்த கைதாகியுள்ளார். இவர் அன்றைய வன்முறைகளின்போது அதனை ஏற்பாடு செய்தவர் என்று குறிப்பிடப்படுகின்ற ஜோன்ஸ்டன் பெர்னான்டோவுக்கு துணை நின்றவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தவிர, சட்ட மா அதிபரால் கைதுசெய்யப்பட வேண்டியவர்கள் என்று குறிப்பிடப்பட்டோரில் இடம்பெறுகின்ற ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களாக சஞ்ஜீவ எதிரிமானே, மிலன ஜயதிலக்க ஆகியோர் அடங்குகின்றனர். இவர்களுடன் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் அமல் சில்வா, மொரட்டுவ நகர சபை ஊழியர் ஒருவர் ஆகியோரும் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைகளின் சூத்திரதாரிகள் என்பது பூர்வாங்க விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

அன்றைய வன்முறைகள் தொடர்பாக கைதுசெய்யப்படவேண்டியவர்கள் என்று சட்ட மா அதிபர் சஞ்சே ராஜரட்ணத்தினால் குறிப்பிடப்பட்டுள்ளோரில் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் அமைச்சர்களாகவும் பலர் இருப்பதை நோக்கும்போது, காடைத்தனப் பேர்வழிகளும் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை வகிக்கின்றனரோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது.

அத்துடன், கைதுசெய்யப்படவேண்டியவர்களின் பட்டியலில் தலைநகர் கொழும்பின் சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருக்கின்ற பிரதி பொலிஸ் மா அதிபரான தேசபந்து தென்னக்கோனும் குறிப்பிடப்பட்டுள்ளதை நோக்கும்போது, எவ்வளவு தூரம் அவர் தமது கடமைகளைப் புறக்கணித்து, ஜனாதிபதி ராஜபக்ஷ, பிரதமர் ராஜபக்ஷ ஆகியோரது ‘அடிவருடியாக’ இருந்துள்ளார் என்பதையும் அறியமுடிகின்றது.


ஒரு நாட்டின் பிரதமர் என்ற பொறுப்புமிக்க பதவியிலிருந்துகொண்டு, மஹிந்த ராஜபக்ஷ வன்முறைகளை தூண்டும் விதத்தில் அன்றைய தினம் இருந்துள்ளதை அவரது உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்தே வன்முறையாளர்கள் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்ததை அடிப்படையாகக் கொண்டு அறிய முடிகின்றது.

கடந்த 9ஆம் திகதி வன்முறைகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்று சட்ட மா அதிபரால் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் குற்றப்புலனாய்வு துறையினரால் பாரபட்சமற்ற முறையில் விசாரணைக்குட்படுத்தப்படும் பட்சத்தில், வன்முறைகளோடு தொடர்புபட்ட மேலும் பல தகவல்கள் வெளிவரலாம் எனவும் எதிர்பார்க்க முடியும்.

குறிப்பிடப்படும் இந்த வன்முறையாளர்கள் அன்றைய தினம் கொழும்பில் தமது கைவரிசையைக் காண்பித்திருந்தனர். எனவே, தாம் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தொகுதிகள், மாகாணசபைகள், நகர சபை பிரதேசங்களில் இவர்கள் எவ்வளவு தூரம் தமது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி, சட்டம் - ஒழுங்கை உதாசீனம் செய்பவர்களாக இருந்திருப்பர்கள்!

ஜனநாயகத்தின் உயர் பீடமாக கருதப்படுகின்ற பாராளுமன்றில் தாம் சார்ந்த பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்துவோர் குற்றவியல் சம்பவங்களோடு சம்பந்தமில்லாது, அப்பழுக்கற்றவர்களாக இருக்கவேண்டும். ஆனால் அமைச்சர்கள் , பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 22 பேரை கைதுசெய்து விசாரணை செய்யுமாறு சட்ட மா அதிபர் உத்தரவிட்டுள்ளதை நோக்கும்போது, நாட்டில் சட்டம் ஒழுங்கு மாத்திரமல்ல. ஜனநாயக விழுமியங்கள்கூட எவ்வளவு தூரம் ‘காடைத்தனமான’ பேர்வழிகளால் மழுங்கடிக்கப்பட்டுள்தென்பதையே அறியமுடிகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மே - 18 புதன்கிழமை
சுபகிருது வருடம் - வைகாசி 04
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : திரிதியை




### மேடம்

உங்கள் செயலில் இழுபறி உண்டானாலும் பிறகு வெற்றியைக் காண்பீர்கள். தடைகள் விலகும். உங்கள் முயற்சியில் லாபம் காண்பீர்கள். எதிர்ப்புகள் விலகும் நாள்.

### இடபம்

கவனமுடன் செயல்பட வேண்டிய நாள்.விழிப்புணர்வு தேவை. எதிர்பார்த்த செயலில் தடை ஏற்பட்டு பின்பு சரியாகும் நாள். யாரையும் நம்பி எந்தவொரு செயலிலும் இறங்க வேண்டாம்.

### மிதுனம்

தம்பதிக்குள் இருந்த பிரச்னைகள் விலகும். நிம்மதி அடைவீர்கள். குடும்ப நலனில் அக்கறை உண்டாகும். நிதி நிலை சீராகும் . நண்பர்களால் நன்மை ஏற்படும்.தொழில் உத்தியோகம் மேம்படும்.

### கடகம்

தொழிலில் மேற்கொண்ட முயற்சியில் ஆதாயம் காண்பீர்கள். பெரிய மனிதர்களின் ஆதரவால் உங்கள் செல்வாக்கு உயரும் நாள். துணிச்சலாக நினைத்ததை செயல்படுத்துவீர்கள்.

### சிம்மம்

முயற்சிகளில் உள்ள தடைகளையும் தாண்டி நிதானமாக செயல்பட வேண்டிய நாள். உங்கள் வியாபாரத்தில் முயற்சிக்கேற்ற ஆதாயத்தை இன்று அடைவீர்கள்.

### கன்னி

அலைச்சல் அதிகரித்தாலும் அதற்கான பலனை அடைவீர்கள். குடும்ப முன்னேற்றத்திற்குரிய முயற்சிகளில் நீங்கள் ஈடுபடுவீர்கள். தகுதிக்கு மீறிய செயல்களில் ஈடுபட வேண்டாம்.

### துலாம்

நண்பர்கள் வழியே நன்மை அடைவீர்கள். மகிழ்ச்சி கூடும் நாள். தொழிலில் உங்கள் தீவிர முயற்சியால் லாபம் காண்பீர்கள். சகோதரரால் இன்று நன்மை காண்பீர்கள்.

### விருட்சிகம்

குடும்பத்தில் இருந்து வந்த சங்கடம் விலகும். பிள்ளைகள் வழியே மகிழ்ச்சி ஏற்படும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். உங்கள் செயல்களில் லாபம் உண்டு. உத்தியோக முயற்சிகள் வெற்றியாகும்.

### தனுசு

மனதில் இனம்புரியாத குழப்பம் மேலோங்கும். நிம்மதி தேவைப்படும் நாள். உங்கள் செயல்பாடுகளை யாரிடமும் தெரிவிக்க வேண்டாம். நினைத்த செயலை நிறைவேற்றி மகிழ்வீர்கள்.

### மகரம்

எதிர்பாராத செலவு ஏற்படும். பொருளாதாரத்தில் கவனம் தேவை. தொழிலை விரிவு படுத்தும் முயற்சியில் இறங்குவீர்கள். நண்பர்களிடம் கவனமாக இருக்க வேண்டிய நாள்.

### கும்பம்

நீண்ட நாட்களாக எதிர்பார்த்த தொகை இன்று கைக்கு வந்து சேரும். தொழிலில் இன்று வருமானம் அதிகரிக்கும். பிறரால் மகிழ்ச்சி அடைவீர்கள். உங்கள் செயல்களில் ஆதாயம் அடைவீர்கள்.

### மீனம்

உத்தியோகத்தில் இருந்த நெருக்கடி விலகும். நிம்மதி ஏற்படும் நாள். புதிய வேலை எதிர்பார்ப்பவருக்கு நல்ல தகவல் வரும். வருமானத்தில் இருந்த தடைகள் விலகும். பேச்சில் கவனம் தேவை.

# பேரறிவாளன் விடுதலை!



சென்னை, மே. 19

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் இருந்து பேரறிவாளன் விடுதலை தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த நிலையில், பேரறிவாளனை விடுதலை செய்து இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

சட்டப்பிரிவு 142-ஐ பயன்படுத்தி பேரறிவாளனை உச்ச நீதிமன்றம் விடுதலை செய்தது.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் 31 ஆண்டுகளுக்கும் மேல் சிறைவாசம் அனுபவித்துவரும் பேரறிவாளனை விடுதலை செய்ய அந்நாட்டு உச்ச நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

நீதிபதிபதிகள் எல். நாகேசுவரராவ், பி.ஆர். கவாய் ஆகியோர் அமர்வு நேற்று இந்தத் தீர்ப்பை வழங்கியது.

பேரறிவாளனை விடுதலைசெய்ய வேண்டும் என தமிழ்நாட்டு அரசு 2018ஆம் ஆண்டு செப்ட்ம்பரில் முடிவுசெய்து, அந்த மாநிலத்தின் ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பிவைத்தது.

ஆனால், இன்றுவரை அந்தப் பதவியில் அமர்ந்து வந்துள்ள அனைவரும் அதைப் பற்றி முடிவு எதையும் மேற்கொள்ளாமல், தள்ளிப்போட்டு வந்தனர். தமிழின உரிமை அமைப்புகள், ஈழ ஆதரவுக் குழுகள், வேல்முருகனின் தமிழக வாழ்வுரிமைக் கட்சி, ம.தி.மு.க., வி.சி.க. ஆகியனவும் இதற்காக பல போராட்டங்களில் பங்கேற்றுள்ளன.

குறிப்பாக, “மாநில ஆளுநர் தனக்குள்ள அதிகாரத்தின்படி மரண தண்டனை விதிக்கப்பட்ட வழக்குகளில் தண்டனையை ரத்துசெய்யவோ மன்னிப்பு வழங்கவோ அரசமைப்புச் சட்டம் 161ன்படி அதிகாரம் உள்ளது. அதை அந்தப் பதவியில் உள்ளவர்கள் பயன்படுத்த மறுக்கிறார்கள்.” என பேரறிவாளன் முதலிய ஏழு தமிழர் விடுதலை இயக்கத்தின் சார்பில் கூட்டாக குற்றம்சாட்டப்படுகிறது.

இந்த நிலையில், நேற்று காலையில் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம், ஆளுநர் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு அசாதாரணமான காலதாமதம் செய்துள்ளதால், நீதிமன்றம் தனக்குள்ள அதிகாரத்தின்படி, அரசமைப்புச் சட்டம் 142ஆவது பிரிவின்படி பேரறிவாளனை விடுதலை செய்ய உத்தரவிடுகிறது என்று திட்டவட்டமாக அறிவித்தது.

கடந்த வாரத்தில், 11ஆம் திகதி இந்த வழக்கில் வாதங்களை முடித்து, தீர்ப்பு தள்ளிவைக்கப்பட்டது. அதன்படி நேற்று தீர்ப்பளிக்கப்பட்டது.

முன்னதாக, 2014ஆம் ஆண்டில் பேரறிவாளன் முதலிய மூவருக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனை வாழ்நாள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து, 2018 செம்டம்பர் 9ஆம் திகதி அன்று அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை ரத்துசெய்ய பரிந்துரை செய்தது. அதன்படி ஆளுநர் தன் முடிவை எடுக்காமல் தாமதம் செய்யவே, அதை எதிர்த்து பேரறிவாளன் நீதிமன்றத்தை நாடினார்.

2020 நவம்பரில் ஆளுநரின் செய்கை குறித்து உச்சநீதிமன்றம் அதிருதியை வெளிப்படுத்தியது.

அடுத்த ஆண்டு ஜனவரி 22ஆம் தேதி ஆளுநருக்கு ஒரு வார காலம் அவகாசம் வழங்கி, அதற்குள் அவர் தன் முடிவை அறிவிக்க வேண்டும் என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

அவருக்குப் பதிலாக, இந்திய உள்துறை அமைச்சகத்தின் சார்பில் பதில் மனு அளிக்கப்பட்டது. அதில், குடியரசுத்தலைவர் இதில் முடிவுகாண வேண்டும் என டில்லி மைய அரசு தெரிவித்தது.

இந்தத் தாமதம் தொடர்ந்த நிலையில், கடந்த மார்ச் 9ஆம் தேதியன்று சிறை விடுப்பில் இருந்துவந்த பேரறிவாளனுக்கு முழுமையான பிணை வழங்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கின் மூலம், நடப்பு இந்திய மைய - மாநில அரசாங்கங்களுக்கு இடையிலான அதிகாரப்பகிர்வு தொடர்பான முக்கிய குறிப்புகளையும் உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# பேரறிவாளன் விடுதலை மாநில சுயாட்சி தத்துவத்துக்கு கிடைத்த மாபெரும் வெற்றி

## தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு

சென்னை, மே. 19

பேரறிவாளன் விடுதலை தனி மனிதனின் விடுதலையாக மட்டுமல்ல. மாநில சுயாட்சி - கூட்டாட்சித் தத்துவத்துக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். பேரறிவாளன் விடுதலைத் தீர்ப்பு மீண்டும் மீண்டும் வரலாற்றில் நினைவுகூரத்தக்கது என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தனக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனையை நிறுத்தி வைத்து தன்னை விடுவிக்கக் கோரி உச்சநீதிமன்றத்தில் பேரறிவாளன் மனுத் தாக்கல் செய்து இருந்தார். தமிழ்நாடு அரசு இந்த மனு மீதான விவாதத்தில் தனது அழுத்தமான கருத்தை முன் வைத்து வாதிட்டது.

தமிழக அரசின் தரப்பில் வாதாடிய வழக்கறிஞர், “பேரறிவாளன் விடுதலை தொடர்பாக முடிவு எடுக்க மாநில அரசுக்கு முழு அதிகாரம் உள்ளது. அரசின் முடிவுக்கு ஆளுநர் ஒப்புதல் வழங்கினால் போதுமானது. இந்திய தண்டனைச் சட்டம் 302 மாநில அரசின் பொது அமைதிக்கு கீழ் வருகிறது. எனவே, அது மாநில அரசின் நிர்வாகத்துக்கு உட்பட்டது.

இந்த வழக்கில் பேறிவாளனை விடுவிக்க மாநில அரசு முடிவு எடுக்க முழு அதிகாரம் உள்ளது. அரசியல் சாசன பிரிவு 161 படி அமைச்சரவையின் முடிவுக்கு ஆளுநர் ஒப்புதல் அளித்தால் போதுமானது. அவர் புதிய முடிவு எடுக்கத் தேவை இல்லை. அரசு முடிவை குடியரசு தலைவருக்கு அனுப்ப தேவை இல்லை” என்று அழுத்தமாக வாதிட்டார்.

ஆனால் ஒன்றிய அரசின் வழக்கறிஞர், ‘இதில் மாநில அரசுக்கு உரிமை இல்லை’ என்றும், ‘ஒன்றிய அரசும், குடியரசுத் தலைவரும் தான் முடிவெடுக்க முடியும்’ என்று வாதிட்டார். ‘நீங்கள் முடிவெடுக்கும் வரை பேரறிவாளன் சிறையில் இருந்தாக வேண்டுமா?’ என்று நீதிபதிகள் கேட்டார்கள். அதற்கு ஒன்றிய அரசின் வழக்கறிஞரால் பதில் அளிக்க முடியவில்லை.

உச்சநீதிமன்ற நீதியரசர்கள் எல்.நாகேஸ்வரராவ், பி.ஆர். கவாய், போபண்ணா அடங்கிய அமர்வு, முதலில் பேரறிவாளனை பிணையில் விடுதலை செய்தது. இப்போது முழுமையான விடுதலையை வழங்கி உள்ளது.

இப்படி விடுவிப்பதற்கு முன்னதாக நடந்த விசாரணையின் போது தமிழ்நாடு அரசின் வழக்கறிஞர் வைத்த வாதம், மாநில உரிமைகளை நிலைநாட்டுவதாக அமைந்திருந்தது. அதுவே இறுதித் தீர்ப்பாக வழங்கப்பட்டு இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

மனிதாபிமான - மனித உரிமை அடிப்படையில் பேரறிவாளன் விடுதலை என்பது வரவேற்கத்தக்கதாக அமைந்திருக்கும் அதே நிலையில் - மாநிலத்தின் உரிமையானது இந்தத் தீர்ப்பின் மூலமாக மிகக் கம்பீரமாக நிலைநாட்டப்பட்டுள்ளது. இது இந்த வழக்கின் மற்றொரு மாபெரும் பரிமாணம் ஆகும்.

‘மாநில அரசின் கொள்கை முடிவில் ஆளுநர் தலையிட அதிகாரம் இல்லை’ என்று நீதியரசர்கள் சொல்லி இருப்பது மிகமிக முக்கியமானது ஆகும். ‘ஆளுநர் செயல்படாத நேரத்தில் நீதிமன்றம் தலையிடும்’ என்று சொல்லி இருக்கிறார்கள் நீதிபதிகள். ‘இந்த விவகாரத்தில் ஒன்றிய அரசிடம் கேட்கத் தேவையில்லை’ என்பதையும் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள் நீதியரசர்கள்.

இதன் மூலமாக மாநில அரசின் அரசியல், கொள்கை முடிவுகளில் தனது அதிகார எல்லைகளைத் தாண்டி ஆளுநர்கள் தலையிட அதிகாரம் இல்லை என்பது மேலும் மேலும் உறுதி ஆகி இருக்கிறது. இது தமிழ்நாடு அரசால், இந்தியா முழுமைக்குமான மாநில சுயாட்சி - கூட்டாட்சித் தத்துவத்துக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்-என்றார். (அ)



# வலி கிழக்கு பிரதேச சபையிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மே 19

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையில் உத்தியோகபூர்வமாக முள்ளிவாய்க்கால் படுகொலை ஈகச் சுடரேற்றி அஞ்சலிக்கப் பட்டது.

நேற்று புதன் கிழமை காலை 7 மணிக்கு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவி சாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் ஒன்று கூடிய பிர தேச சபை உறுப்பினர்கள், பணியாளர்கள் ஈகச் சுடரேற்றி அஞ்சலித்தனர்.

இவ் அஞ்சலியைத் தொடர்ந்து தவிசாளர் மற்றும் சபையின் உறுப்பினர்கள் செல் வதிசைநாயகம், தவநாயகம் ஆகியோர் அஞ்சலியுரையாற் றினர்.

இவ் அஞ்சலியுரைகளில் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்கு நீதி நிலைநாட்டப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டது. (அ-03)

# மின்சாரத் தடை நேரத்தை எதிர்காலத்தில் குறைக்கலாம்

கொழும்பு, மே 19

மழையுடனான காலநிலை காரணமாக, தற்போது அமு லாக்கப்படும் மின் தடை நேரத்தை எதிர்காலத்தில் குறைக்க முடியும் என மின்சார சபையின் சிரேஷ்ட பொறியி யலாளர்கள் சங்கம் தெரிவித் துள்ளது.

மழையுடனான காலநிலை யால், நீர்மின் உற்பத்தி நிலை யங்களை அண்டியுள்ள நீர்த் தேக்கங்களில், நீர்மட்டம் குறிப்பிடத்தக்க அளவு உயர் வடைந்துள்ளமையே இதற்குக் காரணமாகும் என அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

நீர்மின் உற்பத்தி நிலையங் களை அண்டிய பகுதிகளில் உள்ள நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம், தற்போது 50 சதவீதம ளவில் உயர்வடைந்துள்ளதாக மின்சார சபையின் சிரேஷ்ட பொறியியலாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நந்திக பத்திரண தெரிவித்தார். (அ)

# பஸில் ராஜபக்ஷ உள்ளவரை அரசியலில் மாற்றம் ஏற்படாது

## இராதாகிருஸ்ணன் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 19

**“பிரதிச் சபாநாயகர் தெரிவில் கட்சிகள் ஒற்றுமையாக செயற்பட தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அதனை இல்லாமல் செய்தவர் பஸில் ராஜபக்ஷவே. இவரை இலங்கை அரசியலில் இருந்து அப் புறப்படுத்தாதவரை மாற்றத்தை கொண்டு வர முடியாது.”**

இவ்வாறு நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப் பினரும் மலையக மக்கள் முன் னணியின் தலைவருமான வேலு சாமி இராதாகிருஸ்ணன் தெரி வித்துள்ளார்.

பிரதிச் சபாநாயகர் தெரிவு தொடர்பாக ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

பிரதிச் சபாநாயகரை தெரிவு செய்யும் விடயத்தில் பிரதம ரின் கருத்தாக இருந்தது பெண் ஒருவரை தெரிவு செய்ய முடி யுமாக இருந்தால் அது சிறப் பானது என. அதன்படி ஐக்கிய மக்கள் சக்தி அனைத்து தரப் பினருடனும் கலந்துரையாடி பெண் ஒரு வரை பெயரிட்டி ருந்தது. அதற்கு அனைவரும்



சம்மதித்திருந்த நிலையிலேயே தெரிவு நடைபெற்ற அன்று காலையில் பஸில் ராஜபக்ஷ வின் ஏற்பாட்டில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார் பில் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

இதன் காரணமாக பாராளு மன்றத்தில் இருண்டு பெயர்கள் முன்மொழியப்பட்டன.எனவே இந்த சந்தர்ப்பத்தில் வாக்கெ டுப்பு ஒன்றின் மூலமாக தெரிவு செய்ய வேண்டிய ஒரு சூழ் நிலை ஏற்பட்டதுடன் இரண்டு குழுக்களாக பிரிந்து செயற்பட வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது.

இதன் காரணமாக ஒற்று மையாக செயற்பட தீர்மா னித்திருந்த விடயத்தை இல் லாமல் செய்து கட்சிகளை பிரித்தவர் இந்த பஸில் ராஜ பக்ஷவே.இவருக்கு இது கைவந்த கலை. கடந்த காலங்க ளில் இவர் சிறுபான்மைக் கட்சி களை பிரித்து துண்டாடினார். இன்றும் அதே வேலையை இவர் தொடர்ந்து செய்கின்றார்.

அதே நேரத்தில் பாராளு மன்றத்தில் பிரதமர் ரணில் விக்கிரசிங்க நினைப்பது போல நடக்க முடியாது என்பதை இந்த பிரதிச் சபாநாயகர் தெரி வின் மூலமாக பஸில் ராஜபக்ஷ பிரதமருக்கு உணர்த்தியுள் ளார்.-என்றார். (அ)

# 160 மில்லியன் டொலரை வழங்குகிறது உலக வங்கி!

கொழும்பு, மே 19

உலக வங்கி இலங்கைக்கு 160 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அந்த நிதியை பெற்றோ லியக் கொள்வனவுகளுக்கு பயன்படுத்த முடியுமா என்பது குறித்து ஆலோசித்து வருவதாக பிரதமர் தெரிவித்தார். (அ)

# கோப்பாய் பிரிவில் இரு வேறு விபத்து; சிறுவன் உள்ளிட்ட நால்வர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மே.19

யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற இரு வேறு விபத்து சம்பவங்களில் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

திருநெல்வேலி , இராம லிங்கம் வீதியில் பூங்கனிச் சோலைக்கு அருகில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு , இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளா னதில் மூன்று இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

கோப்பாய் பூதர் மடத்த டியைச் சேர்ந்த மகேந்திரன் மகிந்தன் (வயது 25) , கச்சேரி கிழக்கை சேர்ந்த றொபின்சன் சார்ள்ஸ் (வயது 23) மற்றும் சபாபதிப்பிள்ளை வீதி , சுன்னா கத்தை சேர்ந்த யோகநாதன் மேர்வின் டேனுஜன் (வயது 17) ஆகிய மூவரே உயிரிழந்துள் ளனர்.

ஒரு மோட்டார் சைக்கிளில் இருவரும் மற்றுமொரு மோட் டார் சைக்கிளில் மூவரும் பய ணித்தவேளை பூங்கனிச்சோ லைக்கு அருகில் இரு மோட்



டார் சைக்கிள்களும் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளா னதில் , இருவர் சம்பவ இடத்தி லேயே உயிரிழந்துள்ளனர்.

மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்ட நிலை யில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். ஏனைய இரு வரும் தொடர்ந்தும் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வரு கின்றனர்.

இதேவேளை-

கோப்பாய் பொலிஸ் பிரி வுக்கு உட்பட்ட உரும்பிராய் பகுதியிலும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் தெற்கை சேர்ந்த துரைராசா மயூரன் (வயது 27) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் பயணித்தவேளை , மோட்டார் சைக்கிளில் வேக கட்டுப்பாட்டை இழந்து வீதி அருகே இருந்த மின் கம்பத் துடன் மோதி விபத்து ஏற்பட் டதாக தெரிவிக்கப்பட்டது.

இரு விபத்து சம்பவங்கள் தொடர்பிலும் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-03)

# மானம், மரியாதை எங்களுக்கு உண்டு

## பாராளுமன்றத்தில் கூறினார் சஜித்

கொழும்பு, மே 19

கொள்கைகளை காட்டிக் கொடுக்காது ஒரே நிலையில் இருந்து செயற்படுவதற்கு ஐக் கிய மக்கள் சக்தியின் உறுப்பி னர்களுக்கு மானம், மரியாதை இருப்பதாக கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளு மன்றத்தில் நேற்று தெரி வித்தார்.

225 பேரும் வெட்கமற்றவர் கள் என 22 மில்லியன் மக்கள் கூறுவதாக அவர் குறிப்பிட் டார். கொள்கைகளுக்கு துரோ கம் செய்யாமல் சரியான நிலை யில் இருந்து சுயமரியாதையை பேணுமாறு அவர் வேண்டு கோள் விடுத்தார். (அ)

# கைது வேட்டை தொடர்கின்றது; மொறட்டுவை மேயரும் சிக்கினார்!

கொழும்பு, மே 19

மே - 09 தாக்குதல் சம்பவம் தொடர்பில் மொரட்டுவை நகர முதல்வர் சமன் லால் பெர்ணான்டோ உள்ளிட்ட 6 பேர் சி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொதுஜன பெரமுன களனி பிரதேச சபை உறுப்பினர் மஞ்சுள பிரசன்ன, கரந்தெனிய பிரதேச சபை உறுப்பினர் சமீர சதுரங்க, சீதாவக்கை பிரதேச சபை உறுப்பினர் ஜயந்த ரோஹண, பந்துல ஜயமான்ன



மற்றும் தினேத் கீத்திக்க ஆகிய வர்களே இவ்வாறு கைது செய் யப்பட்டுள்ளனர்.ஆளுங் கட்சி எம்.பிக்கள் இருவர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்ட னர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# யுத்த வெற்றியை முன்னிட்டு படையினருக்கு பதவி உயர்வு

கொழும்பு, மே 19

யுத்த வெற்றியை முன்னிட்டு 396 அதிகாரிகள் மற்றும் 8,110 சிப்பாய்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

முப்படைகளின் தளபதியும் ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் பாதுகாப்புப் பதவி நிலை பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவினால் இவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. (அ)

# குட்டியாராய்ச்சியின் வீடு மீது தாக்குதல் பதுளையில் ஐவர் பொலிஸாரால் கைது!

கொழும்பு, மே 19

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வாசஸ்தலம் தாக்கி, பலத்த சேதம் விளைவிக்கப்பட்டமை குறித்து, விசாரணைகளை மேற்கொண்ட பண்டாரவளைப் பொலிசார் ஐந்து பேரை நேற்று கைது செய்துள்ளனர். மேலும் பலர் தேடப்பட்டும் வருகின்றனர். பதுளை மாவட்டத்தில் 'மொட்டு' சின்னத்தில் போட்டியிட்டு, வெற்றி பெற்ற, பாராளுமன்ற உறுப்பினரான திஸ்ஸ குட்டியாராய்ச்சியின் வாசஸ்தலமே, தாக்கி சேதப்படுத்தப்பட்டது.

கடந்த 9ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து பண்டாரவளை மாநகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியின் பின்னர், அங்கு கூடிய கும்பல், மேற்படி பாராளுமன்ற உறுப்பினரின் வாசஸ்தலத் துக்கு ஊர்வலமாக சென்று, அவ் வாசஸ்தலத்தை தாக்கி, பலத்த சேதத்தை ஏற்படுத்தியி ருந்தது.

இச் சம்பவம் குறித்து, விசாரணைகளை மேற்கொண்ட பண்டாரவளைப் பொலிஸார், நேற்று ஆரம்ப கட்டமாக ஐவரைக் கைது செய்து, விசாரணைக்குட் படுத்தியுள்ளனர். மேலும் சிலர் தேடப்பட்டும் வருகின்றனர். (அ)





# மன்னாரில் உணர்வெழுச்சியுடன் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!

மன்னார், மே 19

**முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு மன்னார் மாவட்டத்திலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில் அதன் மாவட்ட இணைப்பாளர் சகாயம் திலீபன் தலைமையில் நேற்று முற்பகல் 11 மணியளவில் மன்னார் புதிய பஸ் நிலையத்தின் முன்பாக நடைபெற்றது.**

முள்ளிவாய்க்கால் பகுதியில் இரண்டு உறவுகளை பறிகொடுத்த தாயினால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டதுடன் நிகழ்வுக்கு வருகை தந்த அனைவரும் மலர் தூவி தங்கள் அக வணக்கத்தை செலுத்தினர்.

இதன்போது முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்காக எந்த ஒரு நீதியான தீர்வும் இதுவரை கிடைக்கவில்லை என்ற பெற்றோரின் மனக்குமுறல்கள் மகஜராக வாசித்துக் காட்டப்பட்டது.

அத்துடன் நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. (அ)

# தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்!

## தீவிர செயற்பாட்டு மையம் வலியுறுத்து

கொழும்பு, மே 19

"வடக்கில் யுத்தம் முடிவடைந்து 13 வருடங்களாகக் கைதிகளாக உள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் கடத்தப்பட்ட மற்றும் காணாமல் போனோர் தொடர்பான தகவல்களை உடனடியாக வெளியிட வேண்டும் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும்."

இவ்வாறு 'தீவிர செயல்பாட்டு மைய கூட்டமைப்பு' (Radical Centre) கோத்தாபய - ரணில் ஆட்சியை வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அவ்வமைப்பால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

இன்று நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மட்டுமன்றி தமிழ் மக்களுக்கு எதிரான அனைத்து வகையான குற்றங்களுக்கும், மாறி மாறி நாட்டை ஆண்ட அரசாங்கங்கள் பொறுப்பேற்க வேண்டும் என்பதை சுட்டிக் காட்டுகிறோம்.

1948 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்ததிலிருந்து ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கையில் ஆட்சியில் இருந்த அனைத்து அரசியல்வாதிகளின் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ அரசியல் செயல்பாட்டின் விளைவாக, இந்த நாட்டின் ஒட்டுமொத்த குடிமக்களும் மிகவும் அடக்குமுறை மற்றும் வேதனையான வாழ்க்கையை அனுபவித்தனர். அதிலும் தமிழ் மக்களின் இன்னல்கள் இன்னும் அதிகம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக கடமையாற்றிய காலத்தில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டு காணாமல் போன தமது பிள்ளைகளை 13 வருடங்களுக்கு மேலாக அந்தத் தாய்மார்கள் தேடி வருகின்றனர். இன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருக்கும் போதும் அவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. அந்த தாய்மாரின் பிள்ளைகளை கண்டுபிடிக்குமாறு அரசாங்கத்தை வற்புறுத்தும் பொறுப்பில் இருந்து தென்னிலங்கையில் போராட்டம் நடத்தும் நாம் தப்ப முடியாது.

யுத்தத்தின் இறுதிக் காலத்தில் காணாமல் போன தமது இரத்த உறவுகளின் கதி என்ன வென்பதை வெளிப்படுத்துமாறு அரசாங்கத்தை வற்புறுத்தி வடக்கு கிழக்கில் தாய்மார்கள் சுமார் 2000 நாட்களாகப் போராடி வருகின்றனர்.

காணாமல் போனோர் தொடர்பான அரசாங்க அலுவலகம் மற்றும் பிற அறிக்கைகளின்படி, யுத்தம் முடிவடைந்த பின்னர் 1,642 பேர் அரசாங்க பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மேலும் 21,171 பேர் இன்னும் காணாமல் போயுள்ளனர்.

2017 ஆம் ஆண்டின் முற்பகுதியில் வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் சத்தியாக்கிரகப் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

அரச பாதுகாப்புப் பிரிவினரின் பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியிலும் தென் இலங்கையின் எந்தவித ஆதரவோ, சரியான உணவோ இன்றி, இலங்கை வரலாற்றில் மிக நீண்ட போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தமிழ்த் தாய்மார்களின் போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் 'தீவிர செயற்பாட்டு மையம், போராட்டத்தின் நோக்கம் வெற்றி பெறும் வரை பின்வாங்கக் கூடாது என்ற பாடத்தை வடக்குத் தாய்மாரை முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும் என்று தெற்கில் போராடுவோர் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்டுகிறது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தில் சிறிதும் திருப்தியடையாத 'தீவிர செயற்பாட்டு மையம்' இந்த நடவடிக்கை குற்றங்களை மூடிமறைக்கும் முயற்சியாகவே பார்க்கிறது. தமது மக்களின் நியாயமான உரிமைகளுக்காகப் போராடி பல வருடங்களாக மனிதாபிமானமற்ற முறையில் சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யக் கோரி வரும் 'தீவிர செயற்பாட்டு மையம்' அனைத்து அரசியல் கைதிகளையும் உடனடியாகவும் நிபந்தனையின்றியும் விடுதலை செய்து, நேசக்கரத்தை வடக்கிற்கு நீட்டுமாறு கோருகிறோம் - என்றுள்ளது. (அ)

# வன்முறை வெடிக்க எதிரணியே காரணம்

## அமைச்சர் கஞ்சன குற்றச்சாட்டு



கொழும்பு, மே 19

"ஜ.வி.பி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி தலைவர்களின் கருத்துக்கள், குரோதமான பேச்சுக்கள் காரணமாகவே வன்முறை வெடித்தது. அலரி மாளிகைக்கு வந்து விட்டு அமைதியாக வீடுகளுக்குச் சென்றவர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்" என்று அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

வன்முறையில் எம்.பிக்கள் உட்பட அரசியல் பிரதிநிதிகளின் வீடுகள் மற்றும் சொத்துக்கள் சேதமாக்கப்பட்டது தொடர்பான ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

கொலையுடன் தொடர்புள்ளவர்களைக் கைதுசெய்ய வேண்டும். இதற்குத் தலைமை தாங்கியவர்களை நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும். அரசு சார்பில் 76 எம்.பிக்களின் சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. சிலரின் அனைத்துச் சொத்துக்களும் அழிக்கப்பட்டன.

மே 9 ஆம் திகதி அலரி மாளிகையில் நடந்த கூட்டத்தின் காரணமாக எமது வீடுகள் அழிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை ஏற்க முடியாது.

திட்டமிட்ட வகையில் எமது வீடுகளைச் சுற்றி வளைக்க எதிரணி வழிகாட்டின. ஜே.வி.பி. தலைவர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்களின் கருத்துக்கள், குரோதமான பேச்சுக்கள் இதற்குக் காரணமாக அமைந்தன.

அரசமைப்பின் ஊடாக முடியாவிட்டால் வேறு வழியில் ஆட்சியை மாற்றுவதாக எதிரணி உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். ஜனாதிபதியைத் துரத்த உதவாதவர்களை தாக்குமாறு அவர்கள் கோரினார்கள். எம்.பிக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது சபாநாயகரின் பொறுப்பாகும். எமது நிலைப்பாட்டை மாற்றி ஜனாதிபதியைத் துரத்தும் முயற்சி வெற்றியளிக்காது. அரச வாகனங்கள் கூட தீவைக்கப்பட்டுள்ளன.

மக்களின் பணத்திலே அவற்றைத் திருத்த வேண்டியுள்ளது. அரசியல் ரீதியில் பரப்பப்பட்ட 1988 - 1989 கால கலவரம் மீண்டும் வேறு வழியில் முன்னெடுக்கப்படுகின்றது. கடந்த 6, 7 மாதங்களில் எதிரணி முன்வைத்த உரைகளை ஆராய வேண்டும்-என்றார். (அ)

# மலையக கட்சிகள் ஒன்றாக இணைந்து மக்களின் கவசமாக செயற்படவேண்டும்

## ஜீவன் தொண்டமான் அழைப்பு



**கொழும்பு, மே 19**

**புதிய பிரதமருக்கு எமது ஆதரவை தெரிவித்துள்ளோம். அமைச்சு பொறுப்பை ஏற்குமாறு அவர் கோரிக்கை முன்வைத்தார். நாளை நாம் அமைச்சு பதவி ஏற்றாலும் அது ஜீவன் தொண்டமானுக்குரிய அமைச்சு பொறுப்பல்ல. அது அனைத்து மலையக மக்களுக்குரிய அமைச்சு பொறுப்பாகுமென இ.தொ.க பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் எம்.பி தெரிவித்தார்.**

சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றிய அவர், கஷ்டமான காலத்தில் பிரதமர் பொறுப்பை ஏற்றுள்ள ரணில் விக்கிரமசிங்கவின் நேற்றைய உரையை வரவேற்கிறேன். போராட முடியாத நிலையில் மலைய மக்கள் உள்ளனர். ஒரு நாள் சம்பளத்தை விட்டு அவர்களால் வீதியில் இறங்க முடியாதுள்ளது. தற்போதைய நிலையில் கட்சி அரசியல் வேறுபாடின்றி முன்வந்து அனைவரும் செயற்படவேண்டும். தற்போதைய நெருக்கடி யிலிருந்து வெளியில் வர வேண் டும். பொருளாதார நெருக்க டிக்கு தீர்வு காண அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டும். பிரதமருக்கு எமது ஒத்துழைப்பை வழங்குகிறோம்.

வரிமுறையை மாற்றினார்கள். சேதனப் பசளையை ஒரே இரவில் கொண்டுவந்தார்கள். சுமந்திரன் கொண்டு வந்த பிரேரணையை ஆதரித்தோம். மக்களின் குரலாக நாம் செயற்பட வேண்டும். ஜனாதிபதி மீதான அதிருப்தியை வெளிப்படுத்தும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தோம். கஷ்ட காலம் வரும் போது எதிரியை நம்பலாம். ஆனால் நண்பரை நம்பக்கூடாது. நாம் ரணிலுக்கு ஆதரவு என்றபோது பலரும் பாராட்டினார்கள். வேலுகுமார் பிரதமரானாலும் ஆதரித்திருப் போம். பிரச்னைக்கு தீர்வு கொண்டு வரப்பட வேண்டும். தற்பொழுது கஷ்டப்பட்டாலே எதிர்காலத்தில் நிலைமை சீராகும்.

பிரதமர் எமக்கு அழைப்பு விடுத்தார். ஜனாதிபதிக்கு எதிரான நிலைப்பாட்டில் உள்ளோம். ஜனாதிபதிக்கு முரணான கருத்துள்ள பலரும் உள்ளனர். சர்வகட்சி அரசு அமைப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார். மலைய கட்சிகள் ஒன்றிணைந்து மக்களின் கவசமாக செயற்பட வேண்டும்-என்றார். (அ)



## முள்ளிவாய்க்காலில் மரணித்த உறவுகளுக்காக நேற்று வழிபாடு

வவுனியா, மே 19

முள்ளிவாய்க்காலில் மரணித்த உறவுகளுக்கான, ஆத்ம சாந்தி பூசையும், நெய்தீபம் ஏற்றி வழிபடும் நிகழ்வும், நேற்று புதன்கிழமை காலை 08.30 மணிக்கு வவுனியா குருமன்காடு ஸ்ரீவிநாயகர் ஆலயத்தில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் செ. மயூரன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர். செ.சந்திரகுமார், அந்தணர் ஒன்றிய நிர்வாகத்தினர், ஆலய பரிபாலனசபையினர் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# எரிவாயு தரையிறக்கும் பணிகள் இடைநிறுத்தம்

## மறு அறிவிப்பு வரை காத்திருக்க கோரிக்கை

கொழும்பு, மே 19

சீரற்ற வானிலை காரணமாக எரிவாயு தரையிறக்கும் பணிகளை முன்னெடுக்க முடியாதுள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

ஆகையால் மறு அறிவிப்பு வரை காத்திருக்கும் படியும், தேவையில்லாமல் எரிவாயுக்காக வரிசையில் காத்திருக்க வேண்டாம் எனவும் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

நேற்று முதல் சமையல் எரிவாயு விநியோகப் பணிகளை மீள ஆரம்பிப்பதாக லிட்ரோ நிறுவனம் நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தது.

இதன்படி, நாளாந்தம் 80,000 சமையல் எரிவாயு கொள்கலன்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் விஜித்த ஹேரத் தெரிவித்திருந்தார்.

தற்போது வரையில், எரிவாயுவைப் பெற்றுக்கொள்வதற்காக, 7 மில்லியன் டொலர் செலுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டை வந்தடைந்த கப்பலில் இருந்து 2,800 மெற்றிக் தொன் எரிவாயுவை தரையிறக்கும் பணிகள் நேற்று முன் தினம் இரவு ஆரம்பிக்கப்பட்டன. எனினும் சீரற்ற வானிலை காரணமாக முழுமையாக தரையிறக்கும் பணிகள் தடைப்பட்டுள்ளன.

இதேவேளை, 3,500 மெற்றிக் தொன் எரிவாயு தாங்கிய மற்றுமொரு கப்பல் இன்று நாட்டை வந்தடைய உள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனவே, குறித்த இரண்டு கப்பல்களின்மூலம் பெற்றுக் கொள்ளப்படும் எரிவாயு, 5 நாட்களுக்குப் போதுமானதாகும் என லிட்ரோ நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

தற்போதைய நிலைமைக்கு மத்தியில், பொதுமக்கள் ஒரு கொல்களனில் மாத்திரம் எரிவாயுவைப் பெற்றுக்கொள்ளுமாறும் அந்த நிறுவனம் கோரியுள்ளது. (அ)



## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் வவுனியாவில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!

வவுனியா, மே 19

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தினால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும், ஆர்ப்பாட்டமும் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஏ-9 வீதியில் 1915ஆவது நாளாக சுழற்சி முறைப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கொட்டகைக்கு முன்பாக இந்த நிகழ்வு இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## டீசல் பெற நீண்ட வரிசை!



வவுனியா, மே 19

வவுனியாவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இரண்டில் மாத்திரமே டீசல் பெற்றுக்கொள்ளகூடிய நிலை காணப்படுவதனால் வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

நகர மத்தியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் வவுனியா மன்னார் சந்தியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களிலேயே டீசல் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் நேற்று அதிகாலையில் இருந்து வாகனங்கள் வரிசையில் காத்திருந்து டீசலை பெற்று வரும் நிலையில் விவசாய தேவைகளுக்காக கொள்கலன்களிலும் டீசலை பெற பொதுமக்கள் காத்திருந்தனர்.

இந்நிலையில் வவுனியாவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் இல்லா நிலையில் மோட்டார் சைக்கிள் பாவனையாளர்கள் மற்றும் முற்சக்கரவண்டி சாரதிகள் பெரும் துன்பத்திற்குள்ளாகியுள்ளனர். (அ)



# ராஜபக்ஷக்களை காப்பாற்றுவது தனது நோக்கமல்ல என்பதை ரணில் நிரூபிக்கவேண்டும்!

## தமிழக இந்து பத்திரிகை ஆசிரிய தலையங்கம்

“ஒவ்வொரு நெருக்கடியும் வாய்ப்பு ஒன்றுக்கான விதைகளைக் கொண்டிருக்கிறது” என்ற பழமொழி இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவை விடவும் வேறு எவரைப் பொறுத்தவரையிலும் கூடுதலான அளவுக்கு உண்மையானதாக இருக்கமுடியாது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் அவரது சகோதரரான முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எதிரான காலவரையறையற்ற ஆர்ப்பாட்டங்களை மூளவைத்த கடுமையான பொருளாதார நெருக்கடி விக்கிரம சிங்கவை கடந்த வாரம் வரை அவருக்கு எந்த வாய்ப்புமே இல்லாத ஒரு பதவிக்கு உந்தித்தள்ளி யிருக்கிறது.

தற்போதைய கொந்தளிப்பான நிலைவரத்துக்கு மத்தியில் அரசியல் உறுதிப்பாட்டையும் பொருளாதார மீட்சியையும் நோக்கி பணியாற்றக்கூடிய அரசாங்கம் ஒன்று இலங்கைக்கு தேவைப்பட்டது. இடையறாத ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியில் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து விலகியதையடுத்து, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச ஜனாதிபதி கோட்டாபயவின் கீழ் பணியாற்ற முன்வராத நிலையில் விக்கிரமசிங்கவுக்கு அரிதான ஒரு வாய்ப்புக்கு வழி பிறந்தது. 2020 ஒகஸ்ட் பாராளுமன்றத் தேர்தலுடன் விக்கிரம

> **ராஜபக்ஷக்களின் அரசியல் வாய்ப்புக்களை மீள்விப்பதற்கு அல்ல, அரசியல் உறுதிப்பாட்டையும் பொருளாதார மீட்சியையும் கொண்டுவரவே, தான் பாடுபடுவதாக ரணில் நிரூபிக்கவேண்டும்**

சிங்கவுக்கான அரசியல் வாய்ப்புகள் பெரும்பாலும் முடிவுக்கு வந்தன என்றுதான் கூறவேண்டும். அந்த தேர்தலில் அவரது ஐக்கிய தேசிய கட்சி ஒரு ஆசனத்தைக் கூட வென்றெடுக்கவில்லை. விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையில் நாடளாவிய ரீதியில் கட்சிக்கு கிடைத்த மொத்த வாக்குகளின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற ஒரேயொரு தேசியப்பட்டியல் ஆசனம் மூலமாகவே அவரால் பாராளுமன்றத்துக்கு வரக்கூடியதாக இருந்தது.

ஐக்கிய தேசிய கட்சியின் பெருமளவு ஆதரவுத்தளம் முன்னாள் பிரதி தலைவரான சஜித் பிரேமதாசவுடன் சென்றுவிட்டது. அவர் இப்போது சமகி ஜன பலவேகய என்ற கட்சியின் தலைவராக இருக்கிறார். மக்களின் சீற்றத்தின் இலக்காக விளங்கும் ராஜபக்ஷக்களின் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களிலேயே விக்கிரமசிங்க தங்கியிருக்கவேண்டியிருப்பதால், அவர் இப்போது ஒரு அசாதாரண சூழ்நிலையில் இருக்கிறார். பொருளாதார மீட்சியை நோக்கிய நடவடிக்கைகளுக்கு நிபந்தனையுடனான ஆதரவை வழங்க சமகி ஜன பலவேகய முன்வந்திருக்கிறது.

அவர் பிரதமராக பதவியேற்றதில் உள்ள அரசியல் தார்மீகம் குறித்து பல கேள்விகள் இருக்கின்றன. பதவி விலக வேண்டும் என்று ஜனாதிபதிக்கு கொடுக்கப்படும் நெருக்குதல்களை தணித்தமைக்காக விக்கிரமசிங்க மீது மக்கள் கொண்டிருக்கும் ஆத்திரத்தில் ஒரு நியாயம் இருக்கிறது. ஆனால் பொருளாதார நெருக்கடியைக் கையாளுவதற்கு நடைமுறைச் சாத்தியமான ஏற்பாடொன்றின் தேவை மிகவும் அவசரமானதும் அவசியமானதுமாகும். தட்டுப்பாடுகள் நிறைந்த நாட்டுக்கு நிதியுதவிகள் கிடைப்பதை உறுதிசெய்வதற்கு சர்வதேச கூட்டமைப்பு (International Consortium) ஒன்றை அமைப்பது குறித்து அவர் பேசியிருக்கிறார்.

விக்கிரமசிங்கவின் ஒரே பலம் சர்வதேச சமூகத்தின் நல்லெண்ணமேயாகும். 2001 - 2002 காலகட்டத்தில் விடுதலை புலிகளுடன் போர்நிறுத்த உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டு அவர் நேரடிப் பேச்சு வார்த்தை களை நடத்தியபோது சர்வதேச சமூகம் உறுதியாக ஆதரவு வழங்கியது.

அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழிக்கின்ற முயற்சிகள் முன்னெடுக்கப்படக்கூடிய அளவுக்கு அரசியல் சீர்திருத்தங்களை துரிதப்படுத்துவது குறித்து பேசப்படுகிறது. ஆனால் அத்தகைய பரந்தளவிலான மாற்றங்கள் பற்றிய ஊகங்கள் நம்பிக்கையை தருவதாக இல்லை. ஏனென்றால் கடந்த காலத்தில் அத்தகைய பல வாய்ப்புக்கள் தவறவிடப்பட்டன.

ராஜபக்ஷக்களின் அரசியல் வாய்ப்புக்களை மீள்விப்பதற்கு அல்ல,நாட்டின் அரசியல் உறுதிப்பாடு மற்றும் பொருளாதார மீட்சிக்காகவே தான் பாடுபடுவதாக விக்கிரமசிங்க தன்னை விமர்சிப்பவர்களுக்கு நிரூபித்துக்காட்டவேண்டிய மேலதிக சுமையொன்றையும் கொண்டிருக்கிறார்.

*( த இந்து ஆசிரிய தலையங்கம், 17 மே 2022)*

---

# மெல்பேர்ண் கோத்தாகோ நிகழ்வில் தமிழர் இனவழிப்பு பிரசுரங்களை கிழித்து இனவாதம்!

கடந்த ஞாயிறு மெல்பேர்ண் கோத்தாகோ நிகழ்வில் தமிழர் இனவழிப்பு பிரசுரங்களை கிழித்து இனவாத துவேசத்தைக் காட்டிய நபர்களை பல்லின சமூகம் வாழ் அவுஸ்திரேலியர்கள் கண்டித்துள்ளனர் ,

ஞாயிறு மதியம் 12 மணிக்கு நடந்த கோத்தாகோ போராட்டத்தில், தமிழர் தரப்பின் குரலாக பேசுமாறு தமிழ் ஏதிலிகள் கழகத்தைச் சேர்ந்த அரன் மயில்வாகனம் அழைக்கப்பட்டிருந்தார்.

அவர் தனது உரையில் “மெல்பேணில் ஒளித்துள்ள யோசித ராசபக்ஷ மீது நடவடிக்கை எடுங்கள் எனச் சொல்வது போல, போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீதும் நடவடிக்கை எடுங்கள் என கோரிக்கை முன்வைக்கப்படவேண்டும்” எனச் சொன்னார். “இன்னும் சொற்ப நேரத்தில், நடைபெறவுள்ள தமிழர் நீதிக்கான பேரணிக்கும் வாருங்கள்” எனவும் அழைப்பு விடுத்தார்.

அப்படி, அவர் உரையாற்றிக்கொண்டிருக்கும்போது, தமிழர் இனவழிப்பு நாள் பேரணிக்கான துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. இது ஏற்பாட்டாளர்களின் அனுமதி ஏற்கனவே பெறப்பட்டே தமிழர் இனவழிப்பு நாள் பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

அப்போது அங்கு நின்ற சிலர்,






“இனவழிப்பு சிறிலங்காவில் நடைபெறவில்லை” என தர்க்கத்தில் ஈடுபட்டனர். அதில் ஒருவர் துண்டுப்பிரசுரத்தை கிழித்து எறிந்தார்.

மெல்பேர்னில் கோட்டாபயவுக்கு எதிராக சிறிலங்கர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தில் தமிழர்கள் விநியோகித்த மே 18 நினைவேந்தல்நாள் துண்டுப் பிரசுரம் ஆர்ப்பாட்டக்காரரால் கிழித்தெறியப்பட்டமையை பலரும் சமூக வலைத் தளங்களூடாக கண்டித்துள்ளனர்,

இதன்போது குறுக்கிட்ட விராஜ் திசநாயக்க, “தமிழர்களுடைய பிரச்னைகளை நீங்கள் செவி மடுக்கவில்லை என்றால் ஒற்றுமை சாத்தியமற்றது” எனக் குறிப்பிட்டிருந்தார். அது அவர்களின் உரிமை என இன்னொரு ஏற்பாட்டாளர் குழப்பம் செய்தவரை தடுக்கிறார்.

ஆனால் இருந்தும் அந்த குழப்பத்திற்கான நீதி கிடைக்கவில்லை.

அந்நிகழ்வில் இருந்தும் பலர் வந்து, மதியம் 2 மணிக்கு நடைபெற்ற தமிழர் நினைவேந்தல் நாள் பேரணியில் பங்குகொண்டிருந்தனர் என்பதையும் குறிப்பிடவேண்டும்.

இதன் மூலம் வெளிப்படும் செய்தி ஒன்றுதான். தமிழர்களுடைய நீதிக்கான குரலை ஏற்க, சிங்கள மக்கள் தயாராக வேண்டும். தயார்படுத்தப்படவேண்டும் என்பதே. ஆனால் அதற்கு முன்னர், தமிழர்களை இணையுங்கள் எனச் சொல்வது முரண்பாடுகளையே கூர்மைப்படுத்தும்.

இதனை கோத்தாகோ போராட்டத்தில், தமிழர்கள் ஏன் விலகி நிற்கின்றார்கள் என சிந்திக்கும் தமிழர்களும், முற்போக்கு ஒரு சில சிங்கள செயற்பாட்டாளர்களும், ஏனைய சமூக செயற்பாட்டாளர்களும் புரிந்துகொள்ளவேண்டும் என சமூக வலைத் தளங்களூடாக பலரும் கருத்துப் பகிர்ந்துள்ளனர்.

**- அவுஸ்திரேலியாலிருந்து ஐங்கரன்**

# இலங்கை நெருக்கடி: தமிழகத்தில் வாழும் இலங்கை அகதிகள் நிலை என்ன?



**பிரமிளா கிருஷ்ணன்**

இலங்கையில் நடைபெற்றுவரும் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் ஸ்திரமின்மை காரணமாக தமிழகத்தில் இருந்து நிரந்தரமாக இலங்கைக்கு செல்லவிருந்த பல அகதிகள் காலவரையின்றி காத்திருக்கும் சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும், ஒருசிலர் இனி இலங்கைக்கு செல்வதை நினைத்துக்கூட பார்க்கவிரும்பவில்லை என்றும் தெரிவிக்கின்றனர்.

கொரோனா காரணமாக மூன்று ஆண்டுகளாக ஏற்கனவே தடைப்பட்டிருந்த பயணம் தற்போது இலங்கையின் உள்நாட்டுப் பிரச்னை காரணமாக மீண்டும் தடைபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

1980களில் தொடங்கி பல்வேறு கால கட்டங்களில் இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு போர் காரணமாக பல்லாயிரக்கணக்கில் இலங்கை தமிழர்கள் தமிழகம் வந்தவண்ணம் இருந்தனர். இந்நிலையில் 2009ல் போர் முடிவுற்றதால், தங்களது தாயகத்திற்கு செல்ல பலரும் ஆர்வத்துடன் இருந்தனர். இந்தியாவில் இருந்து வெளியேறி இலங்கையில் அவரவர் பூர்வீகத்தில் குடியேற தேவையான உதவிகளை இலங்கை மற்றும் இந்திய அரசு செய்ய முன்வந்த நிலையில், பலரும் குடும்பத்துடன் செல்ல தயாராக இருந்தனர்.

தமிழகத்தில் 29 மாவட்டங்களில் 108 அகதிகள் முகாம்கள் செயல்படுகின்றன. இதில் சுமார் 50,000க்கும் மேற்பட்ட அகதிகள் தங்கியுள்ளனர். முகாம்களுக்கு வெளியில் சுமார் 30,000 பேர் இருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. 2010 முதல் மார்ச் 2022 வரை 15,952 நபர்கள் தமிழக முகாம்களில் இருந்து இலங்கைக்கு சென்றுள்ளனர் என இலங்கை ஏதிலியர் மறுவாழ்வு கழகம் கூறுகிறது. தற்போதுள்ள அரசியல் நிலைமை காரணமாக இலங்கைக்கு கிளம்ப தயாராக இருந்தவர்கள் மீண்டும் காத்திருக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள் என்று இலங்கை ஏதிலியர் மறுவாழ்வு கழகம் தெரிவிக்கின்றது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் தோப்புக்கொல்லை முகாமில் வசிக்கும் குருஷில்டா தர்சினி (28) இலங்கைக்கு திரும்பி போக விரும்பும் ஒருவர். தன்னுடைய வயதான பெற்றோர்கள் யாழ்ப்பாணத்தில் இருப்பதால் தனது குடும்பத்துடன் விரைவில் இலங்கை திரும்பவேண்டும் என எதிர்பார்க்கிறார். "நான் பிறந்து வளர்ந்தது தமிழ்நாடுதான். இலங்கைக்கு செல்லவேண்டும் என்பது பலவருட கனவு. இந்த மாதம் நான் என் கணவர், குழந்தையுடன் பயணம் மேற்கொள்வதற்கான விமான டிக்கெட் எடுத்திருந்தேன். தற்போது அந்த பயணத்தை தள்ளிப்போடவேண்டியதாகிவிட்டது. என் இளைய சகோதரி பள்ளிப்படிப்பு முடிந்தும் இலங்கைக்கு சென்றுவிட்டாள். தற்போது அவள், இலங்கை விமான சேவையில் செவிலியராக வேலைசெய்கிறாள். 30 வயதிற்குள் இலங்கைக்கு சென்றால்தான் அங்கு அரசு வேலை கிடைக்கும். இப்போது அங்கு பிரச்னையாக உள்ளது. ஆனால் என் பெற்றோரை நான் கவனிக்கவேண்டும் என்பதால் விரைவில் அங்கு சென்றாகவேண்டும்" என்கிறார் குருஷில்டா தர்சினி.



அதேநேரம் இந்தியாவில் இருந்து கடந்த சில ஆண்டுகளில் இலங்கைக்கு திரும்பியவர்கள் பொருளாதார சிக்கலில் தற்போது தவிப்பதாகவும், விலைவாசி ஏற்றம் அவர்களின் வாழ்வாதாரத்தை நசுக்குவதாகவும் உள்ளது என்கிறார்கள்.

தமிழகத்தில் இருந்து 30 ஆண்டுகளுக்கு பின்னர், இலங்கைக்கு குடிபெயர்ந்த கனகாம்பிகை சுந்தரலிங்கம் (50) இலங்கையில் தற்போது நிலவும் சூழல் மிகவும் கவலைதருவதாக உள்ளது என்கிறார். "இந்தியாவில் இருந்து இங்கு வந்தபோது, இங்குள்ள விலைவாசி குறைவாக இருந்தது. எங்களுக்கு கொடுக்கப்பட்ட உதவித்தொகை மற்றும் இங்கு ஈட்டிய வருவாய் உதவியது. நாங்கள் 2020ல் கரூர் மாவட்ட முகாமில் இருந்து எங்கள் சொந்த ஊரான வவுனியாவுக்கு வந்தோம். எங்கள் நிலத்தில் பயிர் செய்தோம். அப்போது எல்லா பொருட்களும் விலைகுறைவாக இருந்தது. ஒரு கிலோ கோதுமை மா இலங்கை பணத்தில் ரூ.48ஆக இருந்தது. தற்போது அதே ஒரு கிலோ ரூ.240ஆக உள்ளது. எங்களால் சமாளிக்கமுடிய வில்லை" என்கிறார் அவர்.

மேலும் அவர் பேசுகையில், "இந்தியாவிலும் விலைவாசி அதிகரித்துள்ளதை கேள்வியுற்றோம். அதனால், நாங்கள் இங்கு வந்துவிட்டதால் வருத்தம் இல்லை. போர் சூழலை கண்டவர்கள் நாங்கள், தற்போது உள்ள நிலை மாறும் என்று எங்களுக்கு நாங்களே நம்பிக்கை ஊட்டிக்கொள்கிறோம்" என்கிறார் கனகாம்பிகை.

இலங்கையில் தற்போது உள்ள நிலைமை சரியாக வாய்ப்பு குறைவாக இருப்பதாக நம்பும் சிலர் இலங்கைக்கு செல்லும் திட்டத்தை கைவிட்டதாக கூறுகின்றனர். கும்மிடிபூண்டியில் வசிக்கும் விஸ்வநாதன் சுந்தரமூர்த்தி (44) இலங்கைக்கு செல்லும் விருப்பம் முற்றிலுமாக இல்லை என்கிறார். "போர் முடிந்து அமைதி வந்தது, சில ஆண்டுகள் மக்கள் முன்னேறினர். ஆனால் மீண்டும் அங்கு பாதுகாப்பு இல்லாத சூழல் ஏற்பட்டுள்ளது. வெறும் பொருளாதார சிக்கல் மட்டுமல்ல நம் வாழ்க்கையை வாழ்வதற்கான பாதுகாப்பு அங்கு கிடைக்குமா என்ற சந்தேகம் எழுகிறது. நான் செல்ல முற்பட்டேன். ஆனால் இனி தமிழ்நாட்டில் இருந்துவிடலாம், சொந்தங்களை பார்ப்பதற்கு வேண்டுமானால் போய்வரலாம் என்று முடிவு செய்துவிட்டேன்" என்கிறார்.

விஸ்வநாதனின் குழந்தைகள் தமிழகத்தில் படிப்பதற்கு நல்ல வாய்ப்பு உள்ளது என்றும் அங்கு சென்று அவர்களின் வாழ்வை போராட்டத்திற்கு மத்தியில் நடத்துவது தேவையில்லை என்று கருதுவதாகவும் சொல்கிறார்.

விஸ்வநாதனை போல இலங்கைக்கு செல்வதற்கான திட்டத்தை கைவிட்டவர்கள் பலர் உள்ளனர் என்றும் ஒரு சிலர் தமிழகத்தில் உள்ள குடும்பங்களுடன் திருமண பந்தங்களில் இணைந்துள்ளதால் திரும்பி செல்பவர்களின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கும் என்கிறார் மூத்த பத்திரிகையாளர் பகவான் சிங்.

"1983ல் முதன்முதலாக இலங்கையில் இருந்து ராமேஸ்வரம் கரைக்கு இலங்கை தமிழ் அகதிகள் வந்துசேர்ந்தனர். அப்போது முதல் பல அகதிகளை நான் பேட்டி எடுத்திருக்கிறேன். 2009ல் போர் முடிந்தபின்னர் ஒரு சிலருக்கு நாட்டிற்கு செல்லும் விருப்பம் இருந்தது. இந்திய அரசு, தமிழக அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் ஒரு சிலர் சென்றனர். ஆனால் தற்போது உள்ள பொருளாதார நிலைமை சீராக மேலும் இரண்டு ஆண்டுகள் ஆகும் என இலங்கை அரசு கூறுகிறது. இந்த நிலையில், மீண்டும் தாய்நாட்டிற்கு செல்லலாம் என்று கருதும் இலங்கையர்களின் எண்ணிக்கை சொற்பமாகத்தான் இருக்கும்" என்கிறார்.

தமிழகத்தில் கிடைக்கும் கல்வி, வேலைவாய்ப்பு, முகாமில் உள்ள வசதிகள் மற்றும் பாதுகாப்பு உள்ளிட்டவை அங்குள்ள சூழலைக் காட்டிலும் மிகவும் திருப்திகாரமாக இருப்பதால், ஒரு சிலர் தமிழ்நாட்டிருக்கே திரும்பி வந்தவர்கள் இருக்கிறார்கள் என்கிறார். "1980களில் தொடங்கி இன்றுவரை தமிழகத்தில் இலங்கை தமிழர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கின் றன. தமிழகத்திற்கு ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு கட்சியும் அகதிகளுக்கு வசதிகளை கூறிவருகின்றனர். தற்போதைய முதல்வர் ஸ்டாலின், அகதிகள் முகாம் என்பதற்கு பதிலாக முகாம்களை புனர்வாழ்வு மையம் என்று சொல்லலாம் என்று அறிவித்தார். அதனால், ஒரு சிலர் நிரந்தரமாக இங்கே இருப்பது என முடிவுசெய்துவிட்டார்கள்" என்கிறார்.

(பி.பி.சி.)








# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

CHANNEL

36) பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

37) நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

38) தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

39) கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


40) இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

41) அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

42) பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

43) கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

44) எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

45) 

படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

46) நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

47) மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

48) சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

49) எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

50) காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

51) பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

52) தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

53) மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

54) சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

55) பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

56) காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

57) கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஓரிகாமி 3) அலப்பறை

58) உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

59) குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

(30 புள்ளிகள்)

60) பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36. | 3 | 37. | 1 | 38. | 1 |
| 39. | 2 | 40. | 3 | 41. | 3 |
| 42. | 1 | 43. | 3 | 44. | 3 |
| 45. | 2 | 46. | 3 | 47. | 2 |
| 48. | 2 | 49. | 3 | 50. | 2 |
| 51. | 3 | 52. | 3 | 53. | 3 |
| 54. | 3 | 55. | 2 | 56. | 3 |
| 57. | 2 | 58. | 2 | 59. | 3 |
| 60. | பொருத்தமான வாக்கியங்கள் | | | | |

CHANNEL-1

## 19.05.2022
## வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

CHANNEL - 2

## 19.05.2022
## வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |







# முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நினைவேந்தல் மட்டக்களப்பில்!

மட்டக்களப்பு, மே. 19

முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நாள் நேற்று இலங்கை உட்பட சர்வதேச நாடுகளிலும் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நாள் நிகழ்வு நேற்று மட்டக்களப்பு கல்லடி சித்திவிநாயகர் ஆலய முன்றலில் நடைபெற்றது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் உபதலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பொன்.செல்வராசா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது உயிர்நீர்த்தவர்களின் நினைவாக ஈகச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டதுடன் கூட்டுப் பிரார்த்தனைகளும் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவர் சீ.யோகேஸ்வரன் மற்றும் கிழக்கு மாகாண அமெரிக்க மிசனின் குரு முதல்வர் அருட்தந்தை லூத் ஆகியோரினால் கூட்டுப்பிரார்த்தனைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் நினைவுரைகளும் நிகழ்த்தப்பட்டன.

இதன்போது முள்ளிவாய்க்கால் இனஅழிப்பின் வேதனைகளை வெளிப்படுத்தும் வகையிலான முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பகிரப்பட்டது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன்,பிரதி முதல்வர் க.சத்தியசீலன், முன்னாள் பாராளுமுன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், பா.அரியநேத்திரன், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் கி.துரைராஜசிங்கம், முன்னாள் கிழக்கு மாகாண உதவி தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் உட்பட மாநகரசபை உறுப்பினர்கள், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள், தவிசாளர்கள், உறுப்பினர்கள், வாலிப முன்னணி உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டனர். (அ)

# கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றத்தில் பாரபட்சம்

## உயரதிகாரிகள் தலையிட்டு தீர்வை பெற்றுத்தர ஆசிரியர்கள் கோரிக்கை !

மட்டக்களப்பு, மே. 19

கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றத்தில் இம்முறை பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது என பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரம் கிழக்கு மாகாண கல்வித் திணைக் களத்தின் 06.04.2022 ஆம் திகதியுடைய கடிதங்களின் பிரகாரம் வெளி வலயங்களுக்கான மேலதிக பதிலீட்டு ஆசிரியர்கள் இடமாற்றமானது எந்தவித நிபந்தனை காலமும் இடப்படாமல் அனுப்பப்பட்டுள்ளது கவலை அளிப்பதாக ஆசிரியர்களிடமிருந்து வருத்தம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னைய காலங்களில் வழங்கப்பட்ட வெளி வலய ஆசிரியர் இடமாற்றங்கள் யாவும் இரண்டு அல்லது மூன்று வருடங்கள் என நிபந்தனை காலம் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு வெளி வலயங்களுக்கு செல்லும் ஆசிரியர்கள் ஆகக் குறைந்தது 15 வருடங்கள் வேறு வேறு பாடசாலைகளில் சேவையாற்றியவர்கள் என்பதுடன் இவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்லும் வலயங்களில் இருந்து மீண்டும் எப்போது தமது சொந்த வலயங்களுக்கு இடம் மாற்றப்படுவார்கள் என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை என ஆசிரியர்களிடமிருந்து அறிய முடிகிறது.

அத்தோடு ஒரே காலத்தில் வழங்கப்பட்ட நியமனங்களில் ஒரு சிலர் மாத்திரம் சொந்த இடங்களில் தங்களுக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி வேலை செய்யும்போது குறிப்பிட்ட சிலர் மாத்திரம் இவ்வாறான இடங்களில் மாட்டிக் கொண்டு மாகாண கல்வித் திணைக்களத்திற்கு சென்று வருவதே தமது வேலையாக மேற்கொண்டு வருகின்றனர்.

நாட்டில் தற்போதைய பொருளாதார நிலையை கருத்தில் கொண்டு கல்வி அமைச்சே ஆசிரியர் நியமனங்களை தங்களது சொந்த இடங்களில் வழங்குமாறு கூறும்போது மாகாண கல்வித் திணைக்களங்கள் பொருத்தமில்லாத வகையில் ஆசிரியர்களை தெரிவு செய்து வெளி வலயங்களுக்கு இடமாற்றம் செய்வது வேதனை அளிப்பதாக பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பில் மிகக் கூடிய கவனம் எடுத்து வழங்கப்பட்ட இடம் மாற்றங்களுக்கு நிபந்தனை காலத்தை வழங்கி ஆசிரியர் சேவைக்கு கல்வி அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கிழக்கு மாகாண பிரதம செயலாளர், கல்வியமைச்சின் செயலாளர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுள்ளனர். (அ)





# பெண்களுக்கான கழிவறை சேதம்

மட்டக்களப்பு, மே. 19

காத்தான்குடி கடற்கரையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் பெண்களுக்கான கழிவறை தொகுதி, இனந்தெரியாதோரால் நேற்று அதிகாலை சேதப்படுத்தப்பட்டுள்ளது.

காத்தான்குடி நகர சபையினால் காத்தான்குடி கடற்கரை பகுதியில் பெண்களுக்கான இக்கழிவறை தொகுதி நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

காத்தான்குடி கடற்கரைக்கு வரும் பெண்களுக்கு கழிவறை வசதி இல்லாததால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்நிலையில், காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.அஸ்பரின் முயற்சியால் கழிவறை தொகுதி நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. (அ)

# பொலிஸ் - இராணுவ கூட்டு வீதித் தடை அரண் திறப்பு

மட்டக்களப்பு, மே. 19

மட்டக்களப்பு - வாகரை, வெலிக்கந்தை எல்லை ரிதிதென்ன பகுதியில் பொலிஸ் - இரா ணுவ கூட்டு வீதித் தடை அரண் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் நடைபெற்றது.

அல்கிம்மா நிறுவனம், வாழைச்சேனை மற்றும் ஓட்டமாவடி வர்த்தக சங்கம், வாகரை பிரதேச சபை உறுப்பினர் எஸ்.எம்.தாஹிர் ஆகியோரின் நிதிப் பங்களிப்பு மூலம் கண்காணிப்பு கெமரா பொருத்தப்பட்ட பொலிஸ் இராணுவ கூட்டு வீதித் தடை அரண் திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு வெலிக்கந்தை எல்லை பகுதியில் மக்கள் பாதுகாப்பு கருதியும், மாவட்ட எல்லைப் பாதுகாப்பு கருதியும் வீதித் தடை அரண் அமைக்கப்பட்டு சேவைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், மக்கள் நலன் கருதி குடிதண்ணீர் வசதியும் திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் 22 இராணுவ கூட்டு வீதித் தடை அரண் அமைக்கப்பட உள்ளதாகவும், இவற்றுக்கான நிதிப் பங்களிப்பு வேலைத் திட்டங்கள் வர்த்தக சங்கத்தினர் மற்றும் பொது அமைப்புக்கள் மூலம் பெறப்பட்டு அரண் அமைக்கும் பணிகள் இடம் பெறவுள்ளதாக கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எல்.கே. டபிள்யூ.கமல் சில்வா தெரிவித்தார். (அ)

# புலிகள் தாக்குதல் நடத்துவதாக பயமுறுத்திய 7 பேர் சிக்கினர்!

அம்பாறை, மே. 19

விடுதலைப் புலிகள் அமைப்பினர் தாக்குதல் நடத்துவதாகத் தெரிவித்து, அம்பாறை- நவகிரியாவ காட்டிலிருந்து கூச்சலிட்டவாறு ஓடி வந்து கிராமவாசிகளை பயமுறுத்திய ஏழு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பக்கிஎல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

“புலிகள் எம்மை வெட்டுகின்றனர்” என கூக்குரலிட்டவாறு சிலர் ஓடி வருவதை அவதானித்த மின் வேலியைப் பாதுகாக்கும் கடமையில் ஈடுபட்டிருந்த சிவில் பாதுகாப்பு தரப்பினரும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் பக்கிஎல்ல பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

அத்துடன் 119 என்ற அவசர பிரிவினருக்கும் அறிவித்துள்ளனர்.

இதற்கமைய, அம்பாறை மற்றும் அரன்தலாவ பொலிஸ் விசேட பிரிவினர், இராணுவத்தினர், பொலிஸார் இணைந்து அப்பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது சந்தேகநபர்கள் வருகை தந்த மோட்டார் சைக்கிள், 3 சைக்கிள்கள் மற்றும் ஓட்டோவொன்று என்பன அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் சந்தேகநபர்கள் 7 பேரும் திவுலான காட்டுப் பகுதியில் மறைந்திருந்த நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# முள்ளிவாய்க்கால் நினைவிடத்தின் பதிவுகள்...!






























# முஷ்பிஹுர் ரஹீம் புதிய மைல்கல்!

டாக்கா, மே 19

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 5,000 ஓட்டங்களைப் பூர்த்தி செய்த முதலாவது பங்களாதேஷ் வீரர் என்ற வரலாற்று சாதனையை முஷ்பிஹுர் ரஹீம் படைத்துள்ளார்.

பங்களாதேஷில் நடக்கும் இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின்போது முஷ்பிஹுர் ரஹீம் நேற்று புதன்கிழமை இந்த சாதனையை படைத்தார்.

5,000 டெஸ்ட் ஓட்டங்களைப் பூர்த்தி செய்யப்போகும் முதலாவது பங்களாதேஷ் வீரர் யார் என்ற போட்டி தமீம் இக்பாலுக்கும் முஷ்பிஹுர் ரஹிமுக்கும் இடையில் நிலவியது.

துரதிர்ஷ்டவசமாக தமீம் இக்பால் உபாதைக்குள்ளாகி தற்காலிக ஓய்வு பெற்றார். இதனால், அந்த சாதனை முஷ்பிஹுர் ரஹீமுக்கு சொந்தமானது. தனது 81 டெஸ்ட் போட்டியில் ரஹீம் அந்த சாதனையை நிகழ்த்தினார். இலங்கைக்கு எதிரான இந்த டெஸ்ட் போட்டியில் 62 ஓட்டங்களைப் முஷ்பிஹுர் ரஹீம் 5,000 ஓட்டங்களைப் பூர்த்தி செய்தார்.

முஷ்பிஹுர் ரஹீம் 1,000 ஓட்டங்களை 20 டெஸ்ட்களில் பூர்த்தி செய்திருந்தார். 5,000 ஓட்டங்கள் வரையான அடுத்தடுத்த 1,000 ஓட்டங்களை முறையே 15, 17, 14, 15 டெஸ்ட்களில் நிறைவு செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நாடு திரும்பினார் வில்லியம்சன்: அணியின் புதிய தலைவர் யார்?

மும்பை, மே 19

சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் தலைவர் கேன் வில்லியம்சன் நியூசிலாந்து நாட்டுக்குச் சென்றுள்ளார்.

கடைசி ஐ. பி. எல். லீக் போட்டியில் அவர் விளையாடாத சூழலில், அவருக்கு மாற்றாக அணியை வழிநடத்தப் போவது யார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

31 வயதான கேன் வில்லியம்சன், நடப்பு ஐ. பி. எல். தொடரில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் தலைவராக செயல்பட்டு வந்தார். அவரின் தலைமையிலான ஹைதராபாத் அணி, நடப்பு தொடரில் 13 போட்டிகளில் விளையாடி ஆறு வெற்றிகளை பதிவு செய்துள்ளது. தனது அணிக்காக இந்தத் தொடரில் 216 ஓட்டங்கள் மட்டுமே எடுத்துள்ளார் வில்லியம்சன்.

இந்நிலையில், அவரின் மனைவி சாரா, விரைவில் குழந்தையை ஈன்றெடுப்பார் எனத் தெரிகிறது. இது அவர்களது இரண்டாவது குழந்தை. இதனால் அவர் அணியை விட்டு விலகி தாய்நாடு திரும்பியுள்ளார்.

அவர் இல்லாத பட்சத்தில் அந்த அணி வரும் ஞாயிறு அன்று கடைசி லீக் போட்டியில் பஞ்சாப் அணிக்கு எதிராக விளையாட உள்ளது. இந்தப் போட்டியில் அந்த அணியை வழிநடத்தப் போகும் வீரர் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. அனுபவ வீரர் புவ



னேஷ்வர் குமார், மேற்கிந்தியத் தீவுகளின் தலைவர் நிக்கோலஸ் பூரன் மற்றும் தென்னாபிரிக்க வீரர் அய்டன் மார்க்ரம் ஆகியோரின் பெயர் பரிசீலிக்கப்பட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.



# இங்கிலாந்து அணியில் பிரொட், அண்டர்சன்!

லண்டன், மே 19

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடும் இங்கிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

நியூசிலாந்து அணி இங்கிலாந்துக்குச் சுற்றுபயணம் செய்து மூன்று டெஸ்ட்களில் விளையாடுகிறது. இந்த டெஸ்ட் தொடரில் புதிய தலைவர் (ஸ்டோக்ஸ்), புதிய பயிற்றுநருடன் (மக்கலம்) களமிறங்குகிறது இங்கிலாந்து அணி.

இந்நிலையில் டெஸ்ட் தொடரில் இரு டெஸ்டுகளுக்கான இங்கிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. டெஸ்ட் அணியில் மூத்த வீரர்களான ஜேம்ஸ் அண்டர்சனும் பிரொட்டும் மீண்டும் இடம்பிடித்துள்ளார்கள். காயம் காரணமாகக் கடைசியாக இங்கிலாந்து டெஸ்ட் அணியில் இடம்பெற்ற டான் லோரன்ஸ், கிறிஸ் வோக்ஸ், சகிப் முகமது ஆகியோர் தற்போதைய அணியில் இடம்பெறவில்லை.

அணி விவரம்

பென் ஸ்ரோக்ஸ் (அணித் தலைவர்), அலெக்ஸ் லீஸ், ஸாக் கிராவ்லி, போப், ஜோ ரூட், ஜானி பெயர்ஸ்ரோ, ஹாரி புரூக், பென் ஃபோக்ஸ், கிரைக் ஓவர்டன், ஸ்ருவர்ட் பிரொட், ஜேம்ஸ் அண்டர்சன், ஜேக் லீச், மத்யூ பட்ஸ்.

# பரபரப்பான போட்டியில் ஹைதராபாத் த்ரில் வெற்றி!

மும்பை, மே 19

சன்ரைசர்ஸ் ஹைதராபாத்துக்கும் மும்பை இந்தியன்ஸுக்கும் இடையிலான போட்டியில் 3 ஓட்டங்களால் ஹைதராபாத் வெற்றிபெற்றது.

சன்ரைசர்ஸ் ஹைதராபாத்தினால் நிர்ணயிக்கப்பட்ட 194 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 190 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

அணித் தலைவர் ரோஹித் சர்மாவும் இஷான் கிஷனும் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடினர். இதனால் 10 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 89 ஓட்டங்களைக் குவித்து பலமான நிலையில் இருந்தது.

அவர்கள் இருவரும் 95 ஓட்டங்களை முதல் விக்கெட்டுக்காகப் பகிர்ந்திருந்தபோது 11ஆவது ஓவரில் வாஷிங்டன் சுந்தரின் பந்துவீச்சில் ரோஹித் சர்மா (48) ஆட்டமிழந்தார்.

6 ஓட்டங்கள் கழித்து உம்ரன் மாலிக்கின் பந்துவீச்சில் இஷான் கிஷன் (43) நடையைக் கட்டினார்.

அதனைத் தொடர்ந்து திலக் வர்மா (8), டெனியல் சாம்ஸ் (15), ட்ரைஸ்டன் ஸ்டப்ஸ் (2) ஆகியோரும் குறைந்த எண்ணிக்கைகளுடன் களம் விட்டகன்றனர். (144 - 5 விக்.)

கடைசி 3 ஓவர்களில் மும்பையின் வெற்றிக்கு மேலும் 45 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

தங்கராசு நடராஜன் வீசிய 18ஆவது ஓவரில் 26 ஓட்டங்கள் குவிக்கப்பட்டன. அதில் 4 சிக்ஸர்களை டிம் டேவிட் விளாசியிருந்தார். ஆனால், கடைசிப் பந்தில் ஓட்டம் ஒன்றைப் பெற்று அடுத்த ஓவரை எதிர்கொள்ள எண்ணிய டிம் டேவிடை நடராஜன் ரன் அவுட் செய்தார். அதுவே சன்ரைசர்ஸ் ஹைதராபாத்துக்கு திருப்பு முனையாக அமைந்தது.

சிங்கப்பூர் வீரரான டிம் டேவிட் 18 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு 4 சிக்ஸர்கள், 3 பௌண்ட்ரிகளுடன் 46 ஓட்டங்களைக் குவித்தார்.

19ஆவது ஓவரை மிகவும் துல்லியமாக வீசிய புவனேஷ்வர் குமார் ஓர் ஓட்டத்தையும் கொடுக்காமல் சஞ்சய் யாதவின் விக்கெட்டைக் கைப்பற்றினார்.

கடைசி ஓவரை பஸால்ஹக் பாரூக்கி ஓரளவு கட்டுப்பாட்டுடன் வீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து சன்ரைசர்ஸ் ஹைதராபாத்தின் வெற்றியை உறுதிசெய்தார்.

ராமன்தீப் சிங் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் உம்ரன் மாலிக் 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

முன்னதாக முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 193 ஓட்டங்களைக் குவித்தது.

மொத்த எண்ணிக்கை 18 ஓட்டங்களாக இருந்தபோது அபிஷேக் ஷர்மா (9) ஆட்டமிழந்தார். ஆனால், ப்ரியம் கார்க், ராகுல் த்ரிபாதி ஆகிய இருவரும் 2ஆவது விக்கெட்டில் 43 பந்துகளில் 78 ஓட்டங்களைப் பகிர்ந்து அணிக்கு உற்சாகம் ஊட்டினர்.

ப்ரியம் கார்க் 26 பந்துகளில் 46 ஓட்டங்களைக் குவித்தார்.

அதன் பின்னர் த்ரிபாதி, நிக்கலஸ் பூரன் ஆகிய இருவரும் 3ஆவது விக்கெட்டில் 42 பந்துகளில் 76 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியைப் பலப்படுத்தினர்.

பூரன் 3 சிக்ஸ்கள், 2 பவுண்டறிகளுடன் 38 ஓட்டங்களையும் த்ரிபாதி 9 பௌண்ட்ரிகள் 3 சிக்ஸர்களுடன் 76 ஓட்டங்களையும் பெற்றனர்.

அய்டன் மார்க்ரம் (2), வாஷிங்டன் சுந்தர் (9) ஆகிய இருவரும் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

வழமைக்கு மாறாக மத்திய வரிசையில் துடுப்பெடுத்தாடிய கேன் வில்லியம்சன் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் ராமன்தீப் சிங் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களைக் கைப்பற்றினார்.






# யுத்தத்தில் உயிரிழந்தோருக்கு கோட்டா கோ கமவில் அஞ்சலி!

கொழும்பு, மே 19

யுத்தத்தில் கொல்லப்பட்டவர்கள் நினைவாக கொழும்பு - காலிமுகத்திடல் - கோட்டா கோ கமவில் நேற்று நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஈகச்சுடர் ஏற்றப்பட்டு யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

யுத்தத்தில் உயிரிழந்தவர்கள், யுத்தத்தின்போது காணாமலாக்கப்பட்டவர்கள்,



பாதிக்கப்பட்டவர்கள் உள்ளிட்டவர்களை நினைவுகூரும் முகமாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

தமிழ் மக்களுடன் சிங்கள மக்கள் மற்றும் பௌத்த, கிறிஸ்தவ மத குருமார்களும் இந்த நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்றனர். (அ)

# 1988 இல் எனது வீடு தீக்கிரையானது அதன் வலி எனக்கு நன்றாக தெரியும்

கொழும்பு, மே. 19

1988 ஆம் ஆண்டு தனது வீடு தீக்கிரையாக்கப்பட்டதாகவும், அதன் வலி தனக்கு நன்றாகவே தெரியும் எனவும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.



நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர், 9 ஆம் திகதி வன்முறையைத் திட்டமிட்டதாக தமது கட்சி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிராகரிப்பதாகக் குறிப்பிட்டார்.

மக்கள் விடுதலை முன்னணியின் எந்தவொரு செயற்பாட்டாளரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படவில்லை எனவும் அவர் மேலும் கூறினார். (அ)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 26 – 09 –

உதிர்வு 22 – 05 –

## அமரர் ஜெகதீஸ்வரன் உமேஸ்

**திதி: 19.05.2022**

மறைந்தும் மலர்முகம் காட்டும் மகனே
உன் நினைவால் செய்யப்படும் பொதுப்
பணிகள் மூலம் பயனடையும் மக்கள்
முகத்தில் தோன்றும் மகிழ்ச்சியில் உன்
மறைவை நாங்கள் மறக்கின்றோம்.

அன்னாரின் நினைவா பொது மக்களுக்கான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் அவரின் பிறந்த நாளான 26.09.2021 இல் தொடங்கி வைக்கப்பட்டது. அவரின் நினைவாக அமைக்கப்பட்டு வரும் உமேஸ் ஞாபகார்த்த பொதுநோக்கு மண்டபத்தின் ஒரு பகுதி அன்னாரின் நினைவு தினமான 22.05.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று பொதுமக்கள் பாவனைக்காக கையளிக்கப்படுகின்றது.

தகவல் : பெற்றோர்
திரு. திருமதி ஜெயதீஸ்வரன்.


## தேசபந்து தென்னக்கோனிடம் ஒன்பது மணிநேரம் விசாரணை!

கொழும்பு, மே 19

கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னகோனிடம் குற்றப்புலனாய்வு பிரிவினரால் 9 மணித்தியாலங்கள் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் அவர் சிஐடிக்கு அழைக்கப்பட்டு, இவ்வாறு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சனத் நிஷாந்த, மிலான் ஜயதிலக்க ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# டான் பிரியசாத்தும் கைது!

கொழும்பு, மே 19

சமூக செயற்பாட்டாளர் என தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் டான் பிரியசாத் என்பவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் சரணடைந்ததை அடுத்து, அவர் கைது செய்யப்பட்டார்.



கோட்டா கோ கம மற்றும் மைனா கோ கம போராட்டக்காரர்கள்மீது கடந்த 09 ஆம் திகதி தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# 65,000 மெற்றிக் தொன் யூரியாவை இறக்குமதி செய்வதற்கு தீர்மானம்!

கொழும்பு, மே 19

இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ் 65 000 மெட்ரிக் தொன் யூரியாவை இறக்குமதி செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சேதனப் பசளைக்கு மேலதிகமாக நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு யூரியா உரம் வழங்கப்படவுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)


## மரண அறிவித்தல்

தோற்றம் 23 - 04 - 1938



மறைவு 14 - 05 - 2022

## திருமதி குணதேவி தம்பிராஜா

மலேசியா Kuala Lipis ஐப் பிறப்பிடமாகவும், யாழ். சுன்னாகம், நோர்வே Stovner ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட குணதேவி தம்பிராஜா அவர்கள் 14.05.2022 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான அண்ணாமலை இராசம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும், திரு. திருமதி அருளம்பலம் தம்பதிகளின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற தம்பிராஜா (புலோலி R. M in C.W.E) அவர்களின் மனைவியும்,ஞானபூஷணி(நோர்வே), ஐங்கரன்(நோர்வே), காஞ்சனா(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான முருகையா (Police), வரதராயா (Surveyor) மற்றும் அம்பிகாதேவி (கனடா), விமலாதேவி (கனடா), சறோஜினிதேவி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான வாமதேவன், சிவயோகநாதன் மற்றும் கந்தசாமி(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும்,சிவபாக்கியம்(இலங்கை), காலஞ்சென்ற மீனலோயினி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுரேஷ்குமார்(நோர்வே), கெங்காதேவி(நோர்வே), ரமணன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும்,சுகிர்தா, சுரேன், ஸ்வேத்தா, கரன், வனஜா, சாதனா, சயானா, சாய்னா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

**பார்வைக்கு**
Saturday, 21 May 2022 5:00 PM - 7:00 PM
Ahus Kapell Nordbyhagaveien 28, 1474 Nordbyhagen, Norway

**கிரியை**
Monday, 23 May 2022 8:00 AM - 12:00 PM
Alfaset gravlund Nedre Kalbakkvei 99, 1081 Oslo, Norway

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**ஞானபூஷணி - மகள்** Mobile : +4746791194
**ஐங்கரன் - மகன்** Mobile : +4793064568
**காஞ்சனா - மகள்** Mobile : +14162761772

தகவல் :
**ஐங்கரன் (மகன்).**

## இந்த உலகில்...

நாள் எங்கள் தேசத்தின் மீது தொடர்ந்து வந்த, சிங்கள அரசுகள் நிகழ்த்தி வருகின்ற இனவழிப்பின் பாரதூரத் தன்மையையும், அச்சமூட்டும் அதன் பரிமாணத்தையும், அவற்றால் எங்களுக்கு ஏற்பட்ட தாங்கொணா இழப்புகளையும் நினைவுகூர்வதற்கான ஒருநாள் மட்டுமல்ல, எத்தனை துயரங்கள் வந்தாலும் அழுத்தங்கள் தரப்பட்டாலும் நாங்கள் தோற்றுப் போக மாட்டோம் முள்ளிவாய்க்கால் எமது எழுச்சியின் முடிவல்ல எனப் பிரகடனம் செய்கின்ற ஒருநாளுமாகும்.

இந்த நாளில் முள்ளிவாய்க்கால் மண்ணிலே வீழ்ந்திட்ட பல இலட்சக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்களையும், தமிழ் மக்களின் உரிமைகளுக்காக தமது உயிர்களைத் தியாகம் செய்து விதையாகிப்போன மற்றும் தங்கள் எதிர்காலத்தை - வாழ்க்கையை எங்களுக்காக தியாகம் செய்து இன்று துன்பத்தில் வாடுகின்ற எங்கள் செல்வங்களையும் நினைந்து நாங்கள் கண்ணீர் சிந்துகின்றோம். முள்ளிவாய்க்காலைத் தொடர்ந்தும் அதனை ஒட்டிய நாட்களிலும் தாயகமெங்கும் பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்ட எங்கள் உறவுகளையும் நாங்கள் இந்த நேரத்தில் நினைவு கூருகின்றோம்.

பௌத்த - சிங்கள மேம்போக்கான மனப்பாங்கால் அவர்களிடையே உண்மையில் ஏற்பட்டுள்ள பயத்தை பேரினவாதமாக வளர்த்தெடுத்த சிங்கள அரசியல்வாதிகள், தமது தேர்தல் வெற்றிகளுக்கானதும், ஊழல்களுக்கானதுமான கவசமாக வெற்றிகரமாகப் பாவித்து வருகின்றார்கள். சிங்கள மக்களின் பேரினவாத அபிலாஷைகளைப் பூர்த்தி செய்பவர்களே தேரதல்கள் மூலம் அரசியல் தலைமைப் பீடங்களுக்கு வர முடியும் என்பதை சிங்கள மக்கள்தான் தமது வாக்களிக்கும் முறை மூலம் தமது அரசியல்வாதிகளுக்கு வெளிக்காட்டி வருகின்றனர். அதுவே மறுதலையாக அந்த அரசியல்வாதிகள் அதே மக்களைச் சுரண்டுவதற்கான பாதுகாப்பாகவும் மாறியுள்ளது.

சிங்கள மக்களின் இந்த மனப்பாங்கு, ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்கள் மீதும் ஏனைய இனங்கள் மீதும் தொடர்ச்சியாக நிகழ்த்துகின்ற இனவழிப்பை மனிதாபிமானப் பிரச்சினையாகத் தன்னும் கருத முடியாத மன இறுக்கத்தை அவர்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

சிங்கள மக்களின் இந்த மனப்பாங்கைப் பயன்படுத்துவதன் மூலம் தமது ஊழல்களையும், சுரண்டல்களையும் பெரும்பான்மை மக்களிடையே பேசுபொருளா காமல் தவிர்க்க முடியும் என்ற பாடத்தையும் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும், பௌத்த மத நிறுவனங்களும் அறிந்து கொண்டுள்ளனர்.

ஆனால், இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்னான காலம் என்பது தனியே அரசின் ஏனைய இனங்கள் மீதான இனவழிப்பு என்பதுடன் மட்டுப்பட்டிருக்கவில்லை. ஆரம்பம் முதலே அரசின் உள்ளடக்கம் ஊழல் என்பதையும் பொறுப்புக் கூறாத்தன்மையையும் தன்னகத்தே கொண்டிருந்தது. சகல அரச இயந்திரங்களும் இனவழிப்பை நோக்காகக் கொண்டிருந்ததால், மக்களுக்கான பேண்தகு பொருளாதார, அபிவிருத்தி இலக்குகள் இலகுவில் தவிர்க்கப்பட்டன அல்லது புறந்தள்ளப்பட்டன. ஏனைய இனங்கள், நன்மை பெற்றுவிடக்கூடாது என்பதற்காகப் பொருளாதார இலக்குகள் மாற்றியமைக்கப்பட்டன. பெருமளவு நிதியும், மனித வளமும் ஏனைய இனங்களின் அடையாளங்களை அழிப்தற்காக, இருப்புகளைச் சிதைப்பதற்காக செலவு செய்யப்பட்டன.

தமிழ் மக்கள் இனவழிப்புக்கு எதிராக எதிர்ப்பை வெளிக்காட்டியபோது - உரிமைகளைக் கோரியபோது சிங்கள அரசு வன்முறையை பதிலாகக் கையிலெடுத்தது. அரசின் அடக்குமுறைகள் அழித்தொழிப்புகளுக்குப் பாதுகாப்பாகத் தமிழர்களின் எதிர்ப்பு வடிவங்களும் காலத்துக்குக் காலம் பரிமாண வளர்ச்சியடைந்தது. அத்தகைய வளர்ச்சிக்கு ஏற்ப அரசின் வன்முறைக் கொடூரங்களும் மிகையாக அதிகரிக்கத் தொடங்கியது. இதன் உச்சக்கட்டமாக 2009இல் முள்ளிவாய்க்காலில் ஒரு பாரிய இனப்படுகொலை தமிழ் மக்கள் மீது ராஜபக்ச தலைமை தாங்கிய சிங்கள அரசால் நடத்தி முடிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா அரசின் அந்த வெற்றி பௌத்த - சிங்கள மேலாதிக்க வெற்றியாக மடைமாற்றம் செய்யப்பட்டது. நாட்டில் வெற்றிவாதம் திட்டமிடப்பட்ட வகையில் கட்டமைக்கப்பட்டது.

ஏனைய இனங்கள் மற்றும் மீதான மேலாண்மையையும், தீவு முழுவதும் தமக்கென வாக்களிக்கப்பட்டது என்ற பேரினவாதச் சித்தாந்தங்களையும் மேலும் வலியுறுத்துவதன் மூலம் எந்த இனத்துக்கும் உரிய தனித்துவமான உரிமைகளை மறுதலிக்கும் வகையில் பௌத்த - சிங்கள பேரினவாத்தை மேலும் இறுக்கமடையச் செய்வதற்கு இந்த போர் வெற்றிவாதம் பயன்படுத்தப்பட்டது. பௌத்த - சிங்கள மேலாதிக்கம் அதன் வழி வந்த தீவு முழுவதும் தமக்கு வாக்களிக்கப்பட்ட பூமி என்ற கற்பிதம், அதனால் ஏற்பட்ட பேரினவாத அபிலாஷைகள் அனைத்தையும் பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பை ராஜபக்ச அரசு கட்டியெழுப்பிய போர் வெற்றிவாதம் சிங்கள மக்களுக்கு வழங்கியது.

70 ஆண்டு கால பேரினவாத அரசியலின் விளைவை தற்போது பொருளாதாரச் சீர்குலைவாக நாடு அனுபவிக்கின்றது. இன்று ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பேரழிவின் தாக்கங்கள் அனைத்து மக்களையும் தேசம், இனம் என்ற வேறுபாடு இன்றி பாதித்துள்ளது. ஏழைகள் மட்டுமன்றி நடுத்தர வர்க்கத்தினர், மேற்தட்டு வர்க்கத்தினர், முதலாளிகள், தொழிலாளிகள் என அனைவரையும் பாதித்துள்ளது.

உண்மையை ஆராய்ந்தறிய வரலாறு தந்துள்ள இந்த வாய்ப்பைப் பயன்படுத்தாமல் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு ராஜபக்ச ஆட்சியை மட்டும் காரணமாக்கி ஏனைய அரசுகளையும் எப்போதும் அழிவுகளின் பங்காளிகளாக இருக்கின்ற அதிகார வர்க்கத்தையும் இவற்றுக்கெல்லாம் மௌனமாக ஆதரவளித்த தங்களையும் இவை அனைத்துக்கும் அடிப்படைக் காரணமாக அமைந்து, தம்மிடையே புரையோடிப்போயுள்ள பௌத்த - சிங்கள பேரினவாத மனநிலையையும் அதன் நவீன வெளிப்பாடான வெற்றிவாதத்தையும் பொருளாதார பேரழிவுக்கான குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்யும் போக்கையே இன்று போராடுபவர்களிடையேயும் எம்மால் பார்க்க முடிகின்றது.

ஊழலுக்கும் அதிகார துஷ்பிரயோகங்களுக்கும் பொறுப்புக்கூற அழைப்பு விடுக்கும் போராட்டக்காரர்களால் இன்றுவரை தமிழ் மக்கள் மீதான இனவழிப்புக்கு மட்டுமல்ல, இறுதி நேரத்தில் முள்ளிவாய்க்காலில் செய்யப்பட்ட இனவழிப்புக்காகத் தன்னும் பொறுப்புக்கூற வேண்டும் என இன்றுவரை கூற முடியவில்லை.

இந்த மே18இல் தொடர்ந்து வந்த ஸ்ரீலங்கா அரசுகள் தமிழ் மக்களின் தேசியத்தின் மீதான இனவழிப்பு நடவடிக்கைகளையும், ஒட்டுமொத்தமாக சிங்கள அரசுகள் செய்த பாரிய படுகொலைகளையும், ஈற்றில் 2009இல் முள்ளிவாய்க்காலில் உச்சத்தை எட்டிய இனப்படுகொலையையும் நினைவுகூரும் நாம், சிங்கள மக்களுக்கு கூற விளைவது ஒன்றை மட்டுமே!

இந் நாளில் எங்களின் ஆத்மார்த்த கோரிக்கைகளை மீண்டும் ஒரு தடவை வலியுறுத்த விரும்புகின்றோம்.

1. நினைவுகூர்தலுக்கான உரிமையும் ஓர் அடிப்படை உரிமை. அது ஈழத்தமிழர்களின் பண்பாட்டு உரிமையும் கூட. ஈழத்தமிழர்களின் அந்த உரிமையை ஸ்ரீலங்கா அரசு ஒருபோதும் தடுக்கமுடியாது.

2. தமிழினப் படுகொலைக்கு சர்வதேச விசாரணையை மீள வலியுறுத்துகின்ற அதே நேரத்தில், வடக்கு - கிழக்கில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள சிங்கள - பௌத்த மயமாக்கபப் டும் தமிழர் தாயகம் உட்பட்ட கடட் மைக்கப்பட்ட இனவழிப்பு செயற்பாடுகள் அனைத்தையும் உடனடியாக நிறுத்த வேண்டும்.

3. ஈழத்தமிழர்களின் பூர்வீக தாயகமாக வடக்கு - கிழக்கை அங்கீகரித்தல் வேண்டும்.

4. பௌத்த - சிங்கள பேரினவாதத்தின் அடக்குமுறைக்கான ஒரு பொறிமுறையே ஒற்றையாட்சி முறைமை என்பதை ஏற்றுக்கொண்டு, ஸ்ரீலங்காவின் ஒற்றையாட்சியை அகற்றித் தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்ககீரித்தல் வேண்டும்.

5. தமிழர்கள் ஒரு தேசமாக தங்களை அடையாளப்படுத்தத் தேவையான அனைத்து இயல்புகளையும் பண்புகளையும் கொண்டவர்கள் என்பதையும், அதன் வழி அவர்களுக்கு சுயநிர்ணய உரிமையும் ஒருபோதும் பராதீனப்படுத்தவியலாத இறைமையும் உள்ளது என்பதும் ஏற்கப்பட வேண்டும்.

இந்த நாள் “தமிழர்கள் நாம் வீழ்ந்து விடவில்லை வீழ்ந்தாலும் மறுபடியும் எழுவோம்” என்று வீழ்ந்துபட்ட எம் உறவுகளுக்கு வாக்குறுதி அளிக்கும் ஒரு நாளுமாகும். இந்த உலகில் யார் பாராதிருந்தாலும் யார் எதிர்த்தாலும் நாங்கள் நிமிர்ந்தெழுவோம், போராடுவோம், விழுதெறிவோம்” - என்றுள்ளது. (அ)

## மக்களின்...

நினைவிடத்தில் கூடியிருந்த மக்கள் அஞ்சலியின்போது கதறி அழுது தமது உறவுகளுக்கு உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தினர்.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் திடலில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

சமூக செயற்பாட்டாளர்கள் இணைந்து அரசியல் கலப்பில்லாத வகையில் நிகழ்வுக்கான ஏற்பாட்டை மேற்கொண்டிருந்தனர். குறித்த வளாகம் மஞ்சள், சிவப்புக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டது.

நினைவுத் திடலில் பிரதான சுடர் ஏற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அதேவேளை, மக்கள் ஒவ்வொருவரும் சுடரேற்றும் வகையில் தனித்தனியாக தீபங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

நிகழ்வின் தொடக்கமாக போரின் போது உயிரிழந்தவர்கள் நினைவாக அகவணக்கம் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து,

இந்து, கத்தோலிக்க மதத் தலைவர்கள் இணைந்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கான பிரதான சுடரினை ஏற்றினர்.

அதன் பின்னர் அங்கு திரண்டிருந்த மக்கள் சுடரேற்றி அஞ்சலித்தனர்.

அதன் போது,

கொல்லப்பட்டவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களை நினைந்து உறவுகள் கதறி அழுதனர்.

போர் முடிந்து 13 ஆண்டுகள் கடந்த போதிலும் இன்றுவரையில் காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகள் உள்ளார்களா? இல்லையா? என்று தெரியாது பரிதவிக்கும் தாய்மார், உறவுகள் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

இந்த அஞ்சலி நிகழ்வில் மதத் தலைவர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், போரில் உயிர்களைப் பலி கொடுத்தவர்கள், மக்கள் என பல நூற்றுக்கணக்கானோர் பங்குகொண்டு அஞ்சலி செலுத்தினர். (அ)

## யாழ்.பல்கலை...

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி முன்பாக மாணவர்கள் மற்றும் ஊழியர்களால் நினைவு கூரப்பட்டது முள்ளி வாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு, முள்ளிவாய்க் காலில் உறவுகளை இழந்த மாணவ னால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டது.

அதனை தொடர்ந்து மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்களால் சுடரேற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (அ-03)

## வெளிப்பட்டார்...

திருமலை கடற்படைத் தளத்தில் தங்க வைக்கப்பட் டார்.

அதன்பின்னர் அவர் பொதுவெளியில் தலைகாட்டவில்லை. சுமார் 9 நாட்களுக்கு பிறகே, நேற்று பாராளுமன்றம் வந்திருந்தார்.

ஆளுங்கட்சியில் முன்வரிசையில் மஹிந்தவுக்கு ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது. நாமல் ராஜபக்ஷ இரண்டாவது வரிசையில் அமர்ந்திருந்தார். (அ)

## சகவாழ்வெனும்...

வில், “ஒரு நாடோ அல்லது ஒரு மனித இனமோ யுத்தத்தால் அல்லது அதன் வெற்றியால் ஒருபோதும் தோற்கடிக்கப்பட முடியாதது. முப்பது வருட இனப்படுகொலை யுத்தத்தில் நாங்கள் இழந்தவை ஏராளம். வடக்கிலும் தெற்கிலும் உள்ள தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை இழந்தார்கள். பிள்ளைகள் தங்கள் பெற்றோரை இழந்தார்கள். நாங்கள் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்று பிரிந்து போயுள்ளோம். அந்த யுத்தத்தின் காரணமாக நான் ஒரு கண்ணை இழந்தேன். இன்னும் அதிகமான பல இழப்புக்களைத் தாங்க வேண்டியிருந்தது.

யுத்தம் முடிவுக்கு வந்ததைக் கொண்டாடும் இந்தவேளையில் வெறுப்புக்குப் பதிலாக அன்பைக் காட்டுவோம். பழிவாங்குவதற்குப் பதிலாக மன்னித்துக் கொள்வோம். பிரிந்து நிற்பதற்குப் பதிலாக ஒன்றாகவிருந்து ஆறுதல் கொள்வோம். (ஐ)

## பல்கலை...

வர்களை ஏற்றுவதற்காக காலை 9:00 மணியளவில் பரந்தன் சந்தியில் பஸ் நிறுத்தப்பட்டது. இதன்போது தீடிரென பஸ்ஸூக்குள் நுழைந்த நபரொருவர் உடனடியாக கீழிறங்கி முன்பிருந்த கடையொன்றுக்குள் சென்றார்.

இதனால் சந்தேகமடைந்த மாணவர்கள் கடைக்கு சென்று, யார் நீங்கள்? எதற்காக பஸ்ஸில் ஏறி விட்டு இறங்கினீர்கள்? என கேட்டனர்.

அதற்கு நாம் புலனாய்வுப் பிரிவினர் எனவும் முள்ளிவாய்க்கால் செல்லும் பஸ் என்ற அடிப்படையில் ஏறிப்பார்த்தேன் எனவும் அவர் கூறினார்.

இதன்போது மாணவர்களுக்கும் புலனாய்வாளர்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

இதனிடையே அவ்விடத்தில் நின்ற மற்றுமொருவர் தானும் புலனாய்வாளர் எனக் கூறி மாணவர்களிடம் மன்னிப்பு கோரினார். (அ-03)

## தமிழர்களுக்கு...

கள் குருக்கள், இமாம்கள், பாதிரியார்கள் ஆகியோரும் தத்தம் மத ஸ்தலங்களுக்கு போக வேண்டும். நாடு உருப்படும்.”

-இவ்வாறு தெரிவித்தார் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன்.

தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறை ஆட்டம்தான் இன்று உங்கள் மீதும் தொடர்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று பாராளுமன்றத்தில் சிங்கள மொழியில் ஆவேசமாக அவர் இதனைத் தெரிவித்தார். (அ)

## ஜனாதிபதிக்கு...

நிறுத்துவதற்கும், நம்பிக்கையில்லாப் பிரேரணையை உடனடியாக விவாதிப்பதா என்பதை முடிவு செய்வதற்குமான வாக்கெடுப்பா கும்.

தமது வீடுகள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் விவாதம் நடத்த விரும்பும் ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணையை உடனடியாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு ஆதரவாக வாக்களிக்கமாட்டார்கள்.

எனவே இது தோல்வியடையும் என நான் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு 16 ஆம் திகதியே அறிவுரை கூறியிருந்தேன்.

தாக்குதல்கள் தொடர்பான விவாதத்தை இன்றே நடத்துவதற்கு அனுமதித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும், இன்னும் சில நாள்களில் இந்த அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்களுக்கே அடையாள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கவேண்டிய கட்டாயம் ஏற்படும்.

இப்போது ஜனாதிபதிக்கு ஆதரவான பாராளுமன்ற உறுப்பினர்கள், இந்த வாக்கெடுப்பின் தோல்வியை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி நம்பிக்கை யில்லாப் பிரேரணையை பிந்தைய திகதியில் எடுத்துக் கொள்வதைத் தடுக்கிறார்கள் - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# பருத்தித்துறை நீதிமன்றின் முன் மக்கள் கவனவீர்ப்பு போராட்டம்

வடமராட்சி, மே 18

வடமராட்சி, மந்திகை கரகம்பன் கிராம மக்களால் நேற்று கவன வீர்ப்பு போராட்டம் ஒன்று பருத்தித்துறை நீதிமன்றம் முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 12 ஆம் திகதி கடைக்கு சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்த 16 வயதுடைய கரகம்பன், மந்திகை, புலோலியை சேர்ந்த ஜெயச்சந்திரன் அனுஜன் என்ற மாணவன் அதே இடத்தை சேர்ந்த நபர் ஒருவரால் தாக்கப்பட்டு படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் தீவிர சிகிச்சை பெற்றுவரும் நிலையில் குறித்த மாணவனை தாக்கியதின் பேரில் சந்தேக நபர் நேற்று முன்தினம் பருத்தித்துறை பொலிஸின் விசேட பிரிவினரால் கைது செய்யப்பட்டு நேற்று பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தார்.



இதன்போது அங்கு கூடிய மக்கள் குறித்த சந்தேக நபர் ஏற்கனவே பாரிய குற்றச்சாட்டில் பிணையில் விடுதலை செய்யப்பட்டவரென்றும் அந்நிலையிலேயே குறித்த மாணவன் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் அவரை மீண்டும் பிணையில் விடுதலை செய்தால் தமக்கு பாதிப்புக்கள் ஏற்படலாம் எனும் அச்சத்தால் அவருக்கு பிணைவழங்க வேண்டாம் எனக் கோரியே அமைதியான முறையில் கவனயீர்ப்பு போராட்டம் மேற்கொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களை சந்தித்த பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் பரிசோதகர், தாம் குறித்த சந்தேகநபருக்கு பிணை வழங்கக்கூடாது என்று மன்றில் கோரிக்கை முன் வைக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில் சந்தேக நபர் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நீதிமன்றத்தின் உத்தரவின் பெயரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-02)



# கிளிநொச்சியிலும் நேற்று உணர்வுபூர்வமான அஞ்சலி

கிளிநொச்சி, மே 19

கிளிநொச்சியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு சமத்துவக் கட்சி அலுவலகத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மிகப்பெரும் மனித பேரவலத்தை ஏற்படுத்திய இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட அனைத்து உறவுகளுக்கும் வருடம் தோறும் மே மாதம் உணர்வு பூர்வமாக இழந்த உறவுகள் நினைவேந்தப்படுகின்றார்கள். அந்த வகையில் சமத்துவக் கட்சியின் அலுவலகத்திலும் இவ் வருடமும் நினைவேந்தல் நிகழ்வானது முன்னாள் போராளி கண்ணன் தலைமையில் இடம்பெற்றது.

கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் லோறன்ஸ் பொதுச் சுடரை ஏற்றி வைக்க ஏனையவர்களும் சுடர்களை ஏற்றி நினைவு படத்துக்கு மலர் அஞ்சலி செலுத்தி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை கடைப்பிடித்தனர். (அ)





# முள்ளிவாய்க்கால் நினைவு பேரணி நேற்று மன்னாரில்

மன்னார், மே 19

மன்னார் மறைமாவட்ட கரித்தாஸ்-வாழ்வுதயத்தின் இயக்குநர் அருட்பணி செ.அன்ரன் அடிகளாரின் ஏற்பாட்டில், மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவினர், மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்பணி ஞானப்பிரகாசம் அடிகளார் மற்றும் உறுப்பினர்கள் ஒன்றிணைந்து, மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் 13ஆம் ஆண்டு நினைவு பேரணி நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்றுக் காலை மன்னார் நகரத்தின் மத்திய பகுதியில் அமைந்துள்ள மடுமாதாவின் வரவேற்பு திருச்சுரூப வளாகத்திலிருந்து செபமாலை பேரணி ஆரம்பமாகியது.

மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி கிறிஸ்து நாயகம் அடிகளார் ஆரம்ப அஞ்சலி உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து கரித்தாஸ்-வாழ்வுதய பணியாளர்களின் தலைமையில் அனைத்து மக்களும் பவனியாக நகர சுற்றுவட்டம் ஊடாக புனித செபஸ்தியார் பேராலயத்தைச் சென்றடைந்து,அங்கு புனித செபஸ்தியார் பேராலய பங்குத்தந்தை அருட்பணி அகஸ்ரின் புஸ்பராஜா அடிகளாரால் ஏற்பாடு செய்யப்பட்ட செப வழிபாடும் நற்கருணை ஆராதனையும் இடம்பெற்றது.

இதன்போது போரினால் இறந்த அனைத்து ஆன்மாக்களின் ஈடேற்றத்துக்காக அனைவரும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பொதுநிலையினர், சமூக ஆர்வலர்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். (அ)



# பெண்களுக்கென பிரத்தியேக நூலகம்

அம்பாறை, மே 19

ஏறாவூர் நகர சபையின் ஏற்பாட்டில், பெண்களுக்கென பிரத்தியேக நூலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக நகர சபைத் தவிசாளர் எம்.எஸ். நழிம் தெரிவித்தார்.

ஏறாவூரில்தான் பெண்களுக்கென இலங்கையிலேயே தனியான பொதுச் சந்தையும் உள்ளது. அதேபோல, பெண்களுக்கென தனியாக உடற்பயிற்சி ஏற்பாடுகளும் ஏறாவூர் வாவிக் கரையோரத்தில் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளதென்றும் அவர் மேலும் கூறினார்.

"பாத்திமா மகளிர் நூலகம்" என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வாசிகசாலைத் திறப்பு விழா, ஏறாவூர் வாவிக் கரையோரத்தில் அமைந்துள்ள கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் நகர சபைத் தவிசாளர் தலைமையில் நேற்று முன் தினம் மாலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஏறாவூரின் பெண் ஆளுமைகளான பிரதேச செயலாளர் நிஹாறா, ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி ஷாபிறா, பிரதேச செயலக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் சிஹானா, தென்னைப் பயிர்ச் செய்கை ஆய்வு கூடப் பொறுப்பாளர் ஜாஹிறா நகர சபை உறுப்பினர் சுலைஹா உட்பட ஏறாவூர் நகர சபைச் செயலாளர் எம்.எச்.எம். ஹமீம், நகர சபை பிரதித் தவிசாளர் ஏ.எஸ்.எம். நியாழ் உட்பட இன்னும் பல அதிதிகள் கலந்துகொண்டனர். (அ)

# மே 18 இல் இரத்த தானம்

வடமராட்சி, மே 19

வடமராட்சி சுப்பர்மடம் இளைஞர்களால் மே 18 இன் அழிப்பு நாளை முன்னிட்டு நேற்று இரத்ததான முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

குறித்த இரத்ததான முகாமில் குருதியை பெற்றுக் கொள்வதற்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை இரத்த வங்கி பிரிவினர் வருகை தந்தனர். இதில் அதிகளவான இளைஞர்கள் அக்கறையாக குருதிக் கொடையளித்ததை அவதானிக்க முடிந்தது. (அ-02)



# போர்க்காலத்தில் வடக்கு-கிழக்கு போன்று இப்போது தென்னிலங்கையின் நிலைமை!

கொழும்பு, மே. 19

போர் இடம்பெற்ற காலத்தில் வடக்கு - கிழக்கில் அரசால் விதிக்கப்பட்ட பொருளாதாரத்தடை காரணமாக அனைத்துத் துறையினரும் சைக்கிளில் பயணம் செய்து தமது பணிகளைச் செய்தமை போன்று தென் பகுதியில் அனைத்துத் துறையினரும்சைக்கிளில் பயணம் செய்து தமது பணிகளை மேற்கொள்ளவேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்று நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்த வகையில் இது தொடர்பாக சிங்கள இணையத்தளம் ஒன்று வெளியிட்ட செய்தியில்-

தற்போது நாட்டில் உருவாகியுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசிய சேவைகளுக்கான எரிபொருள் விநியோகம் இதுவரை மேற்கொள்ளப்படாததால் மருத்துவமனை பணியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எரிபொருள் பற்றாக்குறையினால் மருத்துவமனை பணியாளர்கள் அவதியுறுவதாகவும், சில மருத்துவர்கள் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள்களில் கடமைக்கு சமூகமளித்துள்ளதாகவும் கம்பஹா மருத்துவமனையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குச் செல்லும் அரச பணியாளர்களுக்கு எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை எனவும் இதன் காரணமாக மாவட்ட மருத்துவ அதிகாரிகள்கூட சைக்கிளில்தான் பணிக்குச் செல்வதாகவும் அவர் கூறினார்.

பணியின் போது எரிபொருள் வரிசையில் நான்கு அல்லது ஐந்து மணித்தியாலங்கள் செலவிட வேண்டியுள்ளதாக கம்பஹாவில் உள்ள முன்னணி மருத்துவமனை ஒன்றின் மருத்துவ அத்தியட்சகர் ஒருவர் தெரிவித்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி-ஜோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-சர்கார், பியார் பிறேமா காதல் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை

**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்



7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம்-இசை நிகழ்ச்சி




10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## சிவம் ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகேகோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு